

## கா. யோகநாதன்

# திருமலைக் கொடுமைகள்

தமது சொந்த ஊரிலேயே காடையர்களால் சிதைக்கப்பட்டு, சொத்துக்கள் சூறையாடப்பட்டு காடுகளுள் ஓடி ஒளித்து அகதிகளாக வந்திருக்கும் தமிழர்களின் நெஞ்சை உருக்கும் வாக்குமூலங்கள்.

வரதர்
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைக் கொடுமைகள்

No 19F

கா. யோகநாதன்

வரதர் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திருமலைக் கொடுமைகள்'
('ஈழநாடு' செய்தித்தாளில் தொடர்ச்சியாக
வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு)
ஆக்கம்: கா. யோகநாதன்
(ஈழநாடு அலுவலக நிருபர்)
வெளியீடு: வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.
முதற்பதிப்பு: நவம்பர் 1985
விலை ரூபா 5/-

புத்தக விற்பனையாளர்கள் பிரதிகளைப்
பெறுவதற்கு:

1. ஆனந்தா புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2. பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைக் கொடுமைகள்

## 1. பாதுகாப்பான இடம் தேடும் அகதிகள்

"யாழ்ப்பாணம் ஒன்றுதான் பாதுகாப்பான இடம். அதனால்தான் உடமைகளை பறிகொடுத்து, உயிர் ஊசலாடும் நிலையில் அடிபட்டு, வதைபட்டு, அல்லற்பட்டு அகதிகளாக வந்துள்ளோம்"

இரு தலைமுறைக்கு மேல் திருமலையில் வாழ்ந்த ஒருகுடும்பத்தினர் இப்படிக்கூறினார்கள்.

சீரும்சிறப்புமாகச் செல்வாக்குடனும் வாழ்ந்த அக்குடும்பத்தினர் அங்கு யாரும் கதியின்றி வடக்கு நோக்கி வந்துள்ளார்கள்.

83 ஜுலை கலவரத்தில் நிலைகுலையாதவர்கள்; தாக்குதலுக்கெல்லாம் தாக்குப் பிடித்தவர்கள், இன்று சொந்த மண்ணை விட்டு புறப்பட்டு வரும் நிலைஏற்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக, பந்நெடுங்காலமாக, பிறந்து, தவழ்ந்த மண்ணை விட்டு வெறியேறும் நிலை ஏற்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரக்கணக்கான அகதிகள் திருமலையை விட்டு வெளியேறி வள்ளங்கள் மூலம் முல்லைத் தீவு வந்து, அங்கிருந்து வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஊர்காவற்றுறையில் ஒரு முகாம். அங்கு நூற்றுக்கணக்கான அகதிகள். பருத்தித்துறையில் ஒரு முகாம். அங்கு ஆயிரக்கணக்கானவர்கள். இதனைவிட உறவினர்கள், நண்பர்கள் வீட்டிலும் பலர் தங்கியுள்ளார்கள்.

நவாலியில் ஒரு பாழடைந்த வீடு. உரிமையாளர் வெளிநாட்டில், அங்கு திருமலையிலிருந்து வந்த 4 குடும்பங்கள் மொத்தம் 28 பேர். அவர்களைச் சந்தித்தபோது எதிர்காலம் உண்டா? என்று ஏங்கித் தவித்த நிலையில் இருந்தார்கள். உதவி அரசாங்க அதிபரின் சிபார்சில் உணவுப் பொருட்கள் கிடைக்கிறது.

படுத்த பாயைச் சுருட்டிக் கொண்டு உடுத்த உடையுடன் புறப்பட்ட அகதிகளுக்கு, அடுத்த நாள் மாற்றியுடுக்கத் துணியில்லை. வசதி படைத்தவர்கள் உதவிக்கு வரவேண்டும். அகதிகளுக்கு வாழ்வளிக்க வேண்டும்.

உப்புவெளியைச் சேர்ந்தவர் திருமதி இ. சுலோசனாதேவி (வயது 27). இவருக்கு இருகுழந்தைகள். நவாலியில் தங்கியிருக்கிறார். அவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை அகதிகள்



சீரும் சிறப்புமாக திருமலையில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த பல குடும்பத்தினர் இனிமேல் அங்கு தங்கி இருக்கவே முடியாது என்று தமது வீடு வாசல், பொருள் பண்டம் அனைத்தையும் பறிகொடுத்துவிட்டு அகதிகளாகப் பல இன்னல்களிடையே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். அவர்களில் ஒரு சிறு பகுதியினரையே மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தபோது அந்தப் பயங்கரங்களைத் தெரிவித்தார்.

"என்ன நடந்தது?" என்று கேட்டேன்.

"கடந்த ஒகஸ்ட் 25-ம் திகதி இரவு 10 மணிக்கு இனத்தெரியாத சிலர் பயங்கர ஆயுதங்களுடன் அத்துமீறி வீட்டுக்குள் புகுந்து கொல்லப் போவதாகப் பயமுறுத்தினார்கள். வீட்டிலிருந்த பொருட்களைக் கொள்ளையடித்ததுடன் வீட்டையும் உடைத்து சேதப்படுத்தினார்கள்.

"பயத்தினாலும், உயிரைக்காக்கவும், உடுத்த உடையுடன் புறப்பட்டு, நிலாவெளியில் நண்பர் ஒருவர் வீட்டில் தங்கினோம். ஒரு லட்சம் பெறும தியான வீடு முற்றாகச் சேதமடைந்துவிட்டது. 25,000 ரூபா பெறுமதியான தளபாடங்களும், 5,000 ரூபா பெறுமதியான துணிகளும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன" — இப்படிக் கூறினார் சுலோசனாதேவி.

"இனி அங்குபோய் முன்னர் போல வாழ முடியுமா?"

"முடியாதுங்க. இன்றுள்ள நிலையில் அந்த எண்ணமே இல்லை. அங்குபோயிருக்க வீடில்லை."

"இந்தச் சம்பவங்கள் எப்படி ஆரம்பமானது?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடந்த ஓகஸ்ட் மாதம் 19-ம் திகதி எங்கள் பகுதிக்கு பக்கத்தில் உள்ள துவரங்காடு என்ற இடத்தில், இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்' பின்னர் பன்குளத்திற்குபக்கத்திலுள்ள நாமலை வத்தையில் தாக்குதல் நடந்தது. அதிலே சிலர் இறந்துபோனுங்க. அதனைதொடர்ந்துஊர்காவல் படையினர் வந்து அங்குமிங்குமாகச் சுட்டதனுல் மக்கள் பயந்து வெளியேறினுர்கள். ஊர்காவல் படையினர் சென்றபின் நாங்கள் போய்ப் பார்த்தோம். ஆறு ஏழு மாடுகள் சுடுபட்டு இறந்துகிடந்தன."

"அப்பகுதியில் எல்லோரும் வெளியேறினுர்களா?"

"பயத்தினுல் பல குடும்பங்கள் வெளியேறின. நாங்கள் புறப்பட்டு பாதுகாப்பு தேடி மட்டக்களப்புக்கு போனேம். அங்கு ஏருவூரில் தாக்குதல் நடந்தது. அங்கும் பாதுகாப்பு இல்லை என்றுகருதி கொழும்பிற்குச் சென்றேம். அங்கும் இருக்க முடியவில்லை. அதனுல் யாழ்ப்பாணம்தான் பாதுகாப்பான ஒரே இடம் எனக்கருதி இங்குவந்தோம்"

என்னுடன் நவாலி பிரஜைகள் குழுசெயலாளர் திரு ஜே. சின்னத்துரையும் வந்திருந்தார். இவர்தான் நவாலிக்கு வரும் அகதிகளுக்கு தேவையான உதவிகளை உடனுக்குடன் அப்பகுதி மக்களின் ஒத்துழைப்புடன் செய்து வருகின்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வீடுகள் எரிந்தன காட்டுக்குள் ஓடினோம்

முல்லைத்தீவுக்கு ஆயிரக்கணக்கான அகதிகள் தினமும் படகுகள்மூலம் வந்துகொண்டிருக்கிறார்கள். அல்லும் பகலும், அச்சத்தின் பிடியில்சிக்கி தவிப்பவர்களும் தொல்லைகள் தாங்கமுடியாதவர்களும் தொடர்ந்து வந்த வண்ணமிருக்கிறார்கள்.

முல்லைத்தீவு வரும் அகதிகளை மக்கள் அன்போடு வரவேற்று ஆறுதல்கூறி, உணவு, உடை வசதிகளை அளித்து வருகின்றனர்.

திருமலையில் கடந்தமாத முற்பகுதியில் தாக்குதல் ஆரம்பித்துவிட்டது. தினமும் அங்குமிங்குமாக ஆரம்பமான தாக்குதல், திருமலை நகருக்கும் பரவி நகரமே தீச்சுவாலையானது.

தாக்குதலில் இருந்து தங்களைக் காப்பாற்ற நகரத்தில் வாழும் தமிழ்மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி அயல்கிராமங்களுக்கு சென்றனர்.

திருமலை மாவட்டத்திலுள்ள ஒரு தமிழ் கிராமம் நிலாவெளி. பாதுகாப்பு தேடி அங்கு வந்தவர்களுக்கு ஒரு அகதி முகாம் அமைக்கப்பட்டது. அங்கு ஆயிரக்கணக்கான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16-8-85ல் நிலாவெளியை ஒரு கோஷ்டியி னர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர். அங்கு அகதிகளாக வந்த பலர் அகதிமுகாமில் இருந்த னர். அகதிமுகாமும் தாக்குதலுக்குள்ளானது. நிலாவெளியிலும் நிலைமை சரியில்லை என்பதை அவர்கள் அறிந்து படகுகளிலும், வள்ளங்களிலும் பாதுகாப்பைத் தேடி முல்லைத்திவு வர ஆரம்பித் தனர். அகதிகள் தெரிவித்த விபரங்கள் இவை.

திருமலையில் தொல்லை தாங்கமுடியாமல்காட் டுப்பாதை வழியாகவும், பின் படகுமூலமும் முல் லைத்தீவு வந்து சேர்ந்துள்ள திருக்கடலூர் வாசி யான ஒருவர் என்ன சொல்கிறார் பார்ப்போம்:

"12-8 85ல் அச்சுறுத்தலினால் திருக்கட லூர் மக்கள் அகதிகளாக வெளியேறி, நிலாவெளி யில் தஞ்சம் புகுந்தனர். 12ம் தேதி முதல் 16ம் தேதி வரை சில தமிழர்கள் புகையிரத நிலைய சந்தியில் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்ட னர். இதனை நேரடியாகக் கண்டேன். அவர்கள் கையில் பெரும் பாராங்கத்தி, கோடரி, அல வாங்கு வைத்திருந்தனர். சில ஊர்காவல் படை யினர் துப்பாக்கிவைத்திருந்தனர்.

"சிறிமாபுரத்தின் ஊடாக 15ம் தேதியிலி ருந்து ஒரு தமிழரையும் திருமலைநகரின் உள்ளே செல்லஅனுமதிக்காமல், தடுத்து சுட்டுக்கொன்ற னர். 17ம் தேதி துவரங்காட்டுப் பகுதியில் தாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் நடத்தி சுமார் 20 பேரை பெண்கள், குழைந் தைகள் உட்பட சுட்டார்கள்.

"17ம் தேதி முதல் 20ம்தேதி வரை பத்தாம் குறிச்சி, படுக்கை, கன்னியா, துவரங்காடு, அன்பு வழிபுரம், அனுராதபுரம் சந்தி, பாலையூற்று முத லிய கிராமங்களில் ஆயிரக்கணக்கான வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினுர்கள்.

"25ம் தேதி திருக்கோணமலை நகரமே தீக்கா டாக இருந்தது. கடலில் வைத்து, படகில் சென் றவர்கள், ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். தொழிலுக்குச் சென்றவர் களும் அங்கு உள்ளோர்களும் இதில் அடங்கியுள் ளனர்.

"ஒவ்வொரு நாளும், காலையிலிருந்து துப் பாக்கியால் தொடர்ந்து சுடப்படும் சத்தங்கள் கேட்கும் அதனுல், தமிழர்களின் பல படகுகள் சேதங்களுக்குள்ளாயின. இதனுல் அவர்கள் தொழில் இழந்து துன்பப்பட்டனர்.

"16ம் தேதி நிலாவெளியில், ஒரு கோஷ்டியி னர் சுற்றி வளைத்தார்கள். சீருடையிலும் வந்தார் கள். சிலர் ஜீப்பிலும் வந்தார்கள். ஊர்காவல் படையினரின் செயலைவிட காடையர்களின் செயலே மிகக் கொடுமையாக இருந்தது. அவர் கள் கொலைசெய்கிருர்கள், தீ வைக்கிருர்கள், பொருட்களைச் சூறையாடுகின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவெளி அகதிகள்



திருமலை மாவட்டத்தைச்சேர்ந்த நிலாவெளியும் இம்முறை மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளது. ஆயுதம் தாங்கிய காடையர்களின் பயங்கரத்தாக்குதலுக்கு அஞ்சி அனுதரவான மக்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட உடுத்திய துணியுடன் காடுகளுக்குள் ஓடி ஒளித்து, பட்டினியோடு கடற்கரையில் காத்திருந்து,வள்ளங்கள்மூலம் பிறஇடங்களுக்குச் சென்று, அங்கிருந்து பஸ் வண்டிகள் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர் — அவர்களில் ஒரு சிறு பகுதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னுடைய வீடும் எரிக்கப்பட்டது. பொருட்கள் சகலதும், தீக்கிரையாக்கப்பட்டன. ஒரு ஊசியாவது எடுக்க முடியவில்லை. என் வீட்டின் பெறுமதி ஆக குறைந்தது இரண்டரை லட்சம் ரூபா. எனது வீட்டுப் பொருட்கள் ஒரு சில லட்சங்கள் பெறும். ஏனெனில், எங்கள் மூதாதையர்களினுல் சேர்த்து வைக்கப்பட்ட பெரும் பொருட்கள், அதாவது தளபாடங்கள், தங்க நகைகள், இப்படி விலை மதிக்க முடியாத பொருட்கள்.

திருக்கடலூரில், எல்லா வீடுகளும் எரிக்கப்பட்டன. எல்லோரும் வீடிழந்து பல நாட்களாக அவதிப்பட்டு பசி பட்டினியோடு, காடுவழியாக நடந்தும் அவதிப்பட்டும் பகுதிபகுதியாக ஓடி மறைந்து தோணிகள் மூலமாக, முல்லைத்தீவுக்கு வந்து இறங்கியிருக்கிறுர்கள். நிலாவெளியில் அகதிமுகாம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. 85 அகதிகள், தாக்குதல் நடத்தியவர்களினுல் கூட்டிச்செல்லபபட்டனர். 20 பேர் வரை தாக்குதலுக்குள்ளானுர்கள்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளத்தோட்டம் என்ற இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனக்கு ஏற்பட்ட கதியைக் கூறுகிறுர்:

"எனது வீடு தாக்கப்பட்டது. எங்கள் வீட்டிலுள்ளவர்கள் காயமடைந்தனர். பாதுகாப்புத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி கால்நடையாகச் செல்லும் வழியில் ஒரு கோஷ்டியினரால் தாக்கப்பட்டோம். ஊர்காவல் படையினராலும் தாக்கப்பட்டோம்.

"நாங்கள் 20 பேர் வரை காட்டின் ஊடாக சென்றபோது அவர்கள் துரத்தி வந்தார்கள். அவர்களிடமிருந்து தப்பி மூன்று நாட்களுக்குப் பின் நிலாவெளியை அடைந்தோம். வழியில் பாண் விநியோகிப்பவரான செல்லத்துரை என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார். திரும்பிப்பார்க்கும்போது எங்களுடன் வந்த சாராயத் தவறணை சுந்தரலிங்கம் பாண்டியன் ஆகியோரைப் பிடித்து விட்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. செல்லப்பா என்னும் முதியவர் என்னுடன் வந்தார். நாங்கள் காட்டின் ஊடாக வந்தோம்.

"காட்டுப்பாதையாக வரும் வழியில் கடற்கரைப்பாதையாக வந்தோம் கடலில் வரும் வள்ளங்களுக்கு எங்கள் உடைகளை காட்டி உதவிபுரியுமாறு தெரிவித்தோம். சுமார் 3 மணி நேரம் எவ்வளவோ கஷ்டப்பட்டு அவர்களை வரச்செய்தோம் அவர்கள் கரையை அடைந்தார்கள். எங்களை வினவினார்கள். விஷயத்தைச் சொன்னோம். அவர்கள் முல்லைத்தீவை சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். எங்களை முல்லைத்தீவில் அல்லது எங்காவது பாதுகாப்பான இடத்தில் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் சேருங்கோ என்று அவர்களிடம் த ஞ் ச ம் புகுந்தோம். அவர்கள் எங்களை முல்லைத்தீவு முகாமில் கொண்டு வந்து சேர்த்தார்கள்.''

திருமலையிலிருந்து வந்த அகதிகளுக்காக முல்லைத்தீவில் நான்கு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. 600 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5000 பேர் நான்கு முகாம்களிலும் இருக்கின்றார்கள்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அகதிகளுக்கு தேவையான உதவிகளை க ச் சே ரி ஊழியர்கள், பொதுமக்கள் ம ற் று ம் பொதுஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் செய்து வருகின்றார்.

18-9-85-ம் திகதி முதல் தினமும் படகுகளில் அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் பொது மக்களால் உணவுகள் வழங்கப்பட்டன. பின்னர் சம்பத்தப்பட்ட அமைச்சின் உதவியுடன் அரசாங்க அதிபர் உணவுகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

## 3. யாழ்ப்பாணம் பாதுகாப்பான இடமா?

''யாழ்ப்பாணம் ஒன்றுதான் பாதுகாப்பன இடம்என்று சொல்ல முடியுமா? இங்கு பயங்கரங்கள் நடக்கவில்லையா? தாக்குதல்கள் இடம் பெறவில்லையா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பஸ் நிலையத்தில் சந்தித்த ஒருவர் மேற் கண்டகேள்விகளை என்னிடம் கேட்டார். அவர் சொல்வதிலும் உண்மை இருந்தது, கடந்த கால சோக சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வந்தன.

மானிப்பாயில், மினிவானில் அதிகாலை கல் விக்கூடத்திற்கு சென்ற மாணவர்கள் வரிசையாக நிறுத்தி சுட்டுத் தள்ளப்பட்டனர். கைதடியில் பட்டப்பகலில் அப்பாவி மக்கள் எட்டுப்பேர் சுட் டுக்கொல்லப்பட்டனர். கடற்பகுதியிலிருந்து வரும் குண்டுகளுக்குப் பயந்து தொழில் இழந்து, கஞ்சிக்கே வழியில்லாது வீட்டில் பிஞ்சுக் குழந்தை கள் கத்திக் கதறி அழுவதைத் தாங்கமுடியாது அகதிகளாக தமிழ் நாட்டிற்கு காரைநகரிலிருந்து படகில் சென்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட் டனர்.

காரைநகரில், அதிகாலை பஸ்ஸிற்காக காத்துநின்ற வயோதிப பிரயாணிகள் மூவர். துடிதுடிக்க துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியானார் கள். யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கு தீ யிட்டபோது இருஊழியர் உயிருடன் எரிந்து சாம்பலானார்கள். அரியாலையில் விருந்துக்கு சென்ற புதுமணத்தம்பதிகள் வீட்டுக்குள் வைத்தே துப்பாக்கிக்கு விருந்தானார்கள். அதே இடத்தில் ஒன்றுமறியாத பஸ் பிரயாணிகள் துடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்து மடித்தனர்! நல்லூரிலே அம்மன் வீதியிலே சொந்த வீட்டுக்குள் வைத்தே சுடப் பட்டனர். ஆரிய குளத்தில் அப்பாவி மக்கள் வீதிக்கு வீதி தெருநாய்களை சுடுவதுபோல் சுடப் பட்டு மதகின்கீழ் பிணக்குவியலாகப் போடப் பட்டார்கள். நெடுந்தீவுக் கொடுமை இன்னும் மக்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை. மோட்டார் படகில் வந்த 33 பேர் வெட்டிக் கொல்லப் பட்டனர்; சுட்டுத்தள்ளப்பட்டனர். வயோதிபர், பெண்கள், சிறுவர்கள் எவருமே தப்பவில்லை பால் மணம்மாறுத பச்சிளங் குழந்தையை கூடவிட்டு வைக்கவில்லை வல்லையில் நடந்த கொடூரம் கொஞ்சமா? பூட்டிய வீட்டுக்குள் வைத்து வாட்டி வதைத்து உயிர் பறிக்கப்பட்டனர். யாழ் வின்சர் சந்தியில், தந்தையும் மகனும் சுடப்பட்டு சடலங் கள் கடத்தப்பட்டு, மயானமொன்றின், மலகூடத்தில், மகனின் சடலம் வீசப்பட்டது. பொலி கண்டியில் வீட்டில் நித்திரையிலிருந்த இளம் பெண் கூரையின் ஊடாக வந்த குண்டுக்கு பலி யானுள். கொடிகாமத்தில் வீட்டுக்குள் வேலை செய்து கொண்டிருந்த யுவதி துப்பாக்கிச் சூட்டினுல் துடிதுடித்து மடிந்தார்.

இப்படி பல அட்டூழியங்களுக்கு அப்பாவி மக்கள் பலியானுர்கள். பொது நூலகம், கூட்டணி காரியாலயம், முன்னுள் யாழ் எம். பி. இல்லம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய வியாபாரசங்கம் இன்னும் பல கட்டடங்கள் இன்றும் ஞாபகச் சின்னங்களாக காட்சி தருகின்றன.

தமிழனுக்கு எதுவுமே பாதுகாப்பான இடம் என்று சொல்லமுடியாது. தமிழன் என்றால் எங்கு எங்கிருந்தாலும், அச்சத்துடன்தான் இருக்கவேண்டிய நிலை. அதற்காக சொந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு அகதிகளாக செல்வது சிந்திக்க வேண்டிய விடயம்தான்.

மன்னாரில் ஆபத்து என்று ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இந்தியா சென்றார்கள். இன்று மன்னார்தான் பாதுகாப்பான இடமெனக்கருதி, வவுனியா, செட்டிகுளம் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அங்கு செல்கின்றனர். முல்லைத்தீவு கிராமங்களில் பயமுறுத்தலுக்கு அஞ்சி வெளியேறி ஆயிரக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர். இன்று திருமலையிலிருந்து பாதுகாப்பிற்காக ஆயிரக்கணக்கான அகதிகள் முல்லைத்தீவு நோக்கி வருகிறார்கள். இக்கரைக்கு அக்கரைபச்சை.

பாதுகாப்பெனப்படும் யாழ்ப்பாணத்திலிருந்தே ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இந்தியாவிற்கும், வெளிநாடுகளுக்கும் சென்று விட்டார்கள். இன்றும் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆதலால் யாழ்ப்பாணம்தான் பாதுகாப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் என்று சொல்லிவிட முடியாதென்று அந்த பெரியவர் சொன்னது சரிதான்.

## 4 வெளியூர்க் காடையர்கள்

தமிழ்மக்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அப்பகுதியில் அகதிமுகாம்களில் இருப்பதுதான் இனத்திற்கு செய்யும் மாபெரும் பணியாகும். நிலைமை சீராகிமீண்டும் அமைதி ஏற்படும் போது தங்கள் பழைய இடங்களுக்குச் செல்ல முடியும்.

முல்லைத்தீவில் கடந்த டிசம்பர் மாதம்முதல் சுமார் 6,000 அகதிகள், முல்லைத்தீவிலுள்ள 14 முகாங்களில் இருக்கின்றார்கள். எல்லோரும், முல்லைத்தீவு கிராமத்தை சேர்ந்தவர்கள். 10 மாதகாலமாக நொந்து போன மக்கள் தங்கள் சொந்த மண்ணை விட்டுச் செல்லக்கூடாது; தொல்லைகள் பல வந்தாலும் எல்லையை விட்டுச் செல்லக்கூடாது என்ற லட்சியத்திற்காக முகாம்களில் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திருமலையில் கூட சுமார் 30,000 மக்கள் அகதிமுகாம்களில்தான் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்தவர்கள், அவர்களுக்கு காணி, வயல், 'வீடு வளவு, உற்றார், உறவினர் எல்லாம் திருமலையில் தான். அவற்றை எல்லாம் விட்டுவிட்டு வரமுடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் மாறும், அமைதி ஏற்படும், தீர்வு பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் திருமலை முகாம்களில் அவர்கள் தஞ்சம் அடைந்தார்கள்.

யாழ்ப்பாணம் வந்துள்ள திருமலை அகதிகளில் பலருக்கு திருமலையில் காணி, வீடுகள் இருக்கிறது, திரும்பவும் திருமலை செல்லவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இருக்கிறார்கள்.

நவாலியில் வந்து அகதியாக தங்கியிருப்பவர் திருமதி எஸ். தங்கபூரணம், வயது 54. இவர் திருமலையில் உப்புவெளியில் 37 வருடங்கள் வசித்தவர். அங்கு சொந்த காணி வீடு உண்டு. இவரை சந்தித்தபோது, தங்களுக்கு நஷ்டஈடு கிடைத்து மீண்டும் நிலைமை சீரானதும் திருமலைக்கு சென்று அங்குவாழ வேண்டும்என்றார், இதேபோல் இங்கு வந்த இன்னும் சிலர் மீண்டும்திருமலைக்கு செல்ல வேண்டும் என்றார்கள்.

தங்கபூரணம் தமது குடும்பத்திற்கு ஏற்பட்ட நிலைமையைக் கூறுகிறார்:

"நாங்கள் இருந்த காணி என் கணவருடையது. காணியில் ஒருகடையுமுண்டு. செப்டம்ப 5ம்தேதி நான் பிள்ளைகளுடன் வீட்டில் இருந்தேன். சுமார் 50 இனந்தெரியாதவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் அப்பகுதியில் தாக்குதலை ஆரம்பித்தனர். இச்சம்பவத்தை பர்ர்த்ததும், நான் பிள்ளைகளுடன் கடற்கரைப் பக்கமாகஓடினேன், கணவனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவந்தார். எனது வீடு உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. வள்ளம்ஒன்றின் மூலம் வந்து பின் வாகனம் ஒன்றில் இங்கு வந்தோம். இரண்டு லட்சரூபா கட்டடம் சேதமடைந்து விட்டது. 15,000 ரூபா தளபாடம், 5,500 ரூபா எவர்சில்வர் பாத்திரங்கள், 3,000 ரூபா அடுப்படி சாமான்கள் கொள்ளை யடிக்கப் பட்டன'':

''தாக்குதல் நடத்தியவர்கள் யார்?'' என்று கேட்டேன்.

'எல்லோரும் வெளியூர் ஆட்கள். புதியமுகங்கள், அங்குள்ளவர்களாக இருந்தால் எங்களுக்குத்தெரியும். அவர்களை அடிக்கடிசந்திப்பதுண்டு. சிறிமாபுரம் எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் தெரியும்.'

''இதற்கு முன்னரும் பாதிக்கப்பட்டீர்களா?''

''83 ஜூலை கலவரத்தில் பாதுகாக்கப்பட்டு சாம்பல் தீவில் போய் இருந்தோம். நிலைமை சீரானதும் திரும்பவும் எங்கள் வீட்டிற்கு போனோம். ஆனால் இம்முறை நிலைமை மோசமாகிவிட்டது. அதனால்தான் இங்கு வந்தோம்''

நவாலியிலுள்ள மற்றொருவர் திருமதி க.சுசீலாதேவி; வயது 27. உப்புவெளியில் வசித்தவர். இவரும் நிலைமைசீரானதும்நஷ்டஈடுகிடைத்தால் மீண்டும் திருமலைக்கு சென்றுவாழ விரும்புவதாக கூறினார். இவருக்கு திருமலையில் சொந்தக் காணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உப்புவெளியிலிருந்து வந்துள்ள
திருமதி ப. செல்வமதி

"ஒரு கோஷ்டியினர் வந்து எங்கள் பகுதியில் மோசமான தாக்குதல் நடத்தினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளை எரித்தார்கள், என்கணவரும் ஒரு பிள்ளையும் எங்கேயென்று தெரியவில்லை. நானும்மூன்று பிள்ளைகளும் சாம்பல்தீவு - மட்டக்களப்புக்குப் போய் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் வீடும் உண்டு பிறந்த நாள்முதல் அங்குதான் வசித்து வருகிருர். காணியில் கடைகள் கட்டி வாடகைக்கு கொடுத்திருக்கிருர். அந்த வருமானத்தில் வாழ்ந்துவந்தவர்.

சுசிலாதேவி தமது குடும்பத்திற்கு ஏற்பட்ட நிலையை கூறுகிருர்:

"உப்புவெளியில் என் கணவருடனும் குழந்தைகளுடனும் வாழ்ந்து வந்தேன். செப்டம்பர் 5ம்தேதி ஒரு கூட்டத்தினர் துவக்கு, இரும்புக் கம்பி வாள்களுடன், தமிழர் வாழும் வீடுகளைத் தாக்கினுர்கள் மக்களைத் தாக்கி பொருட்களைக் கொள்ளையடித்தனர். அட்டூழியம் செய்தனர்: வீடுகளை சேதமாக்கினர்.

"பயத்தினுல் உயிரைக் காப்பாற்ற நானும் 4 குழந்தைகளும் வெளியேறி பாதுகாப்பிற்காக வேறுஇடத்திற்கு ஓடினேம். பின்னர் கடற்கரைக்கு சென்ருேம். வள்ளத்தில் புறப்பட்டு பல கஷ்டத்தின் மத்தியில் இங்கு வந்து சேர்ந்தோம். எனது வீடு சேதமடைந்து பொருட்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டன."

நவாலிக்கு மேலும் 6 பேரை கொண்ட ஒரு குடும்பத்தினர் அகதிகளாக வந்துள்ளனர். திருமலையிலிருந்து அகதிகளாக வருபவர் தங்கள் உறவினர்,நண்பர்கள் வீட்டிலும் தங்கியுள்ளனர். இவர்களுக்கும், நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. பொலிஸில் செய்யப்பட்ட புகாரின்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியை உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து, இந்த நிவாரணத்தை பெற்றுவருகின்றனர்.

## 5. 'சின்னக் கொட்டியா!"

"ஈழத் தமிழனுக்கு 'அகதி' என்ற பெயர் நிரந்தரமாகிவிட்டது. உலகில் ஈழத்தமிழன் இல்லாத நாடே இல்லை. அங்கெல்லாம் அவன் அகதியாகவே வாழ்கிறான். அநேக நாடுகளில் அவன் அகதிமுகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளான். இந்த நிலை எப்போதான் மாறப்போகிறதோ."

பஸ் பிரயாணத்தின் போது அருகில் இருந்த பிரயாணி ஒருவர் இப்படிக் கூறிப் பெருமூச்சு விட்டது என் ஞாபகத்திற்கு வருகிறது.

கொழும்பு மாநகரிலே 58, 77, 83 கலவரங்களுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாகினர். திருமலையில் இன்று 30,000 பேர் அகதிமுகாம்களில் இருக்கின்றனர். முல்லைத் தீவில் முகாம்களில் 5000 திருமலை அகதிகள். முல்லைத்தீவில் மற்றும் 14 முகாம்களில் 5000 முல்லைத்தீவு அகதிகள் 10 மாதங்களாக முகாம்களில் இருக்கிறார்கள். மன்னாரிலுள்ள முகாம்களில் இரண்டாயிரம். வவுனியா, செட்டிகுளம் அகதிகள். மட்டக்களப்பில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து அங்கும் ஆயிரக்கணக்கில் அகதிகள். கிளிநொச்சியில் 20,000 அகதிகள் பருத்தித் துறையில், ஊாகாவற்றுறையில் இன்னும் பல

இடங்களில் அகதிகள். ஈழகத்தில் பல இடங்களி லும் தமிழன் அகதிகள் முகாமில்தான் வாழ்கின் ருன்.

இந்தியாவில் பல இடங்களிலும் சுமார் ஒரு லட்சம் ஈழத்தமிழர் அகதிகளாக வாழ்கின்றனர். மற்றும் பல நாடுகளில் அகதிகளாக ஈழத்தமிழர் ஆயிரக்கணக்கில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

விடிவு ஏற்படாதா? முடிவு வராதா? தீர்வு பிறக்காதா? அமைதி நிலவாதா? என்று உலகெங் கும் அகதிகளாக வாழும் ஈழத் தமிழர் தினமும் வானெலியைத் திருப்புகிருர்கள். பத்திரிகைகளை புரட்டுகிருர்கள்.

உலகில் எதற்கும் முடிவு உண்டு. பாரதப் போருக்கு முடிவு வரவில்லையா? பஞ்சாப்பிரச்னை தீரவில்லையா? வியட்னும் போர் முடிவுக்கு வர வில்லையா? என்று தமிழ் மக்கள் தினமும் தங்களை தேற்றிக்கொண்டு வாழ்கிருர்கள்.

அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கான அகதிகள், நம்பிக்கையைக் கை விடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள்.

முல்லைத்தீவு முகாம்களிலுள்ள திருமலை அகதிகள் தங்களுக்கு விடிவு வரும்; வழிபிறக்கும்; விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வாழ்கின்ருர்கள்.

வீரநகரைச் சேர்ந்த இளம் தம்பதிகள் தங்க ளுக்கு ஏற்பட்ட இன்னல்களை மாறிமாறிச் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள், குடும்பத்தலைவிக்குத்தானே முதலிடம் அப்பெண் என்ன சொல்கிறார் பார்ப்போம்:

''3ம் தேதி இரவு நடந்த பிரச்னைகளால். 4ம் தேதிகாலை ஒரு கோஷ்டியினர் எங்கள் வீட்டிற்கு வந்து எல்லோரையும் வெளியில் வரும்படி கூப்பிட்டார்கள்.

''இங்கு ஒருவர்கூட இல்லை. நீங்கள் ஏன் இருக்கிறீர்கள்? உடனடியாக வெளியேறுங்கோ'' என்று கூறி கடற்கரைக்குக் கூட்டிச்சென்றனர். நாங்கள் செல்லும் போதுவழியில் கடைமுதலாளி ஒருவரும், வேறு ஒருவரும் டயரில்போட்டு எரிக்கப்பட்டிருப்பதைக் கண்டோம்; நாங்கள் அழுத போது வாயைப் 'பொத்துங்கோ' என்று கண்டபடி ஏசினார்கள், நாங்கள் காலை 8மணிக்கு எங்கள் படகில் ஏறிக் கொண்டு நிலாவெளிக்குச் சென்றோம். அங்கு தொழில் ஒன்றும் செய்யவில்லை. அங்கிருக்கும்போது மீண்டும் வந்தார்கள். நாங்கள் ஓடிப்போய் சூசையப்பர் கோவிலில் தஞ்சம் அடைந்தோம்.

'' அங்கு 10 குடும்பங்கள் வரை தங்கியிருந்தார்கள். அப்போது அவர்கள் வந்து கதவுகளை உடைந்து வெளியே கூப்பிட்டனர். 'நீங்கள் ஏன் இங்கு இருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள்

''நாங்கள்அகதிகள்; திருகோணமலையிலிருந்து அகதிகளாக வந்திருக்கிறோம் நாங்கள் அனாதைகள்; யாரும் இல்லை; எங்களுக்கு அடிக்காதீர்கள்' என்று மன்றாடினோம். 'தீவிரவாதிகள் இருந்தால் சொல்லுங்கள்' என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தீவிரவாதிகள் யாரையும் நாம்காணவில்லை. நாங்கள் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் இங்கு சாகிறோம். இளநீரைக் குடித்துக்குடித்து உணவின்றித்தவிக்கிறோம்' என்றேன்.

'உன்கணவன் 'கொட்டியாவுக்கு' உதவி செய்கிறவரா?' என்று என் மனைவியிடம் சிங்களத்தில் கேட்டார்கள். 'கொட்டியா என்றால் என்ன நிறம் என்றுகூட எங்களுக்குத்தெரியாது. நாங்கள் அகதிகளாக வந்திருக்கிறோம், என்று என் மனைவி கூறினார்.

''அப்பொழுது பிள்ளைகளையும், என்னையும் மனைவியையும் வெயிலில் வைத்திருந்தார்கள், காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை வெயிலில் வாடித்தவித்தோம்.

'கோயில் பாதர் எங்கே? அவர் ஒரு கொட்டியா? என்றார்கள். அவரைத் தேடிப்பிடிக்கவேண்டும், என்றார்கள். 'எங்களுக்கு கோயில் பாதரின் பெயர் தெரியாது' என்றோம்.

''பக்கத்திலுள்ளவரைக் கேட்டனர், அவர் பெயரைச் சொன்னதும் 'அவர் ஒரு கொட்டியா' என்றனர்.

மீண்டும் மனைவி தொடர்கிறார்!

''அவர்கள் நிலாவெளியைச் சேர்ந்த ஒரு கடைக்காரரிடம் சிகரட்பெற்றுக்கொண்ட பின் நீ 'கொட்டியாவுக்கு சிகரட்கொடுக்கிறாய்' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி அடிக்கப்போனார்கள். அக்கடைக்காரரின் மனைவியும், பிள்ளைகளும் அடிக்கவேண்டாம் என்று சொல்லி அழுதார்கள்.''

கணவர் மீண்டும் கூறுகிறார்: ''அவர்கள் கோயில் பாதரின் அறைக்குள் சென்று தேடுதல் நடத்தி ஒரு சின்னக்கத்தியைக் கொண்டு வந்தார்கள். இளநீர் பிடுங்கித்தரும்படி கேட்டனர். எனக்கு மரம் ஏறத்தெரியாது என்றேன், மரம் ஏறத்தெரிந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா? என்று கேட்டார்கள். பக்கத்தில் துரைநாயகம் என்ற பெடியன் நின்றார். அவருக்கு 35 வயது இருக்கும், திருமணமாகாதவர். அவருக்குஇளநீர் பறிக்கத்தெரியும் என்றார். அவரைக் கூட்டிச் சென்று பக்கத்திலுள்ள மரங்களிலெல்லாம் இளநீர் பிடுங்கி வெட்டிக்குடித்துவிட்டு 'நீயும் ஒரு கொட்டியா' என்று கூறி பின்னர் அவரையும் கூட்டிச் சென்றனர்.

''அதன்பின் சாப்பாடு இல்லை. பிள்ளைகள் பசியால் துடித்துக் கொண்டிருந்தனர். மாலை 6 மணியாகிவிட்டது. எங்கும் ஒரே வெடிச்சத்தங்கள், என்னையும் சுட்டுக் கொல்லப் போகிறார்கள் என்று பயந்தேன். என்பிள்ளைகள் என்னைக் கட்டிப்பிடித்து 'அப்பா பசிக்குது பசிக்குது' என்று கதறிக் கதறி அழுதார்கள். இதனைபார்த்த அவர்கள் என் மகனைத் தூக்கி 'கொட்டியா, 'சின்னக்கொட்டியா' என்று கையைத் தூக்கிப் 'புலிக்குட்டி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி பிள்ளைகளைக் கதறவைத்தார்கள். எனக்கு சரியான ஆத்திரம் வந்தது, பொறுமையாக இருந்தேன். பின் அவர்கள் சென்றுவிட்டனர்.

''ஏழரை மணிமட்டும் பயத்தினால் உள்ளே இருந்தோம். எந்தநேரமும் கவச வாகன ஓசையும், பீரங்கிவெடிச் சத்தமும் கேட்டன நான் மனைவியையும், பிள்ளையையும் கூட்டிக்கொண்டு கொச்சி தோட்டத்தினால் புகுந்து போகும் போது சிலசடலங்களை கண்டேன்.

''கோவில் அருகில் உள்ள அகதி முகாமிலிருந்த எனக்கு தெரிந்த சிலர் இறந்துகிடந்தார்கள். நானும் மனைவியும் பிள்ளைகளும், சடலங்களுக்கு மேலால் மெதுவாகத்தவழ்ந்து சென்றோம். அப்போது இளநீர் பறிந்து வெட்டிக்கொடுத்த துரை நாயகத்திற்கு மேலாகவும் தவழ்ந்து சென்றோம். அவரை எனக்கு நன்கு தெரியும். அதற்கு அப்பால் ரவி என்று ஒருவர் இறந்து கிடந்தார். நாங்கள் கடற்கரை நோக்கி சென்றோம்.''

மனைவி தொடர்ந்து கூறுகிறார்:

''விடிந்ததும் ஒரு பிளாஸ்டிக் படகில் 3 எரிந்த சடலங்களைப் பார்த்தோம். அந்த நேரத்தில் இனியும் இங்கே இருக்கக் கூடாது என நினைத்து கால்நடையாக காட்டுப்பாதை வழியாக ஐந்தாறு நாள் சாப்பாடின்றி தவியாய்த் தவித்து முல்லைத்தீவு வந்துசேர்ந்தோம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. அகதி முகாமில் தாக்குதல்

'அடர்ந்து படர்ந்து வளர்ந்து நிற்கும் ஆலமரத்தைத் தறிக்கவேண்டும் என்ருல் முதலில் கிளைகளைத் தறித்தபின் கொப்புகளை வெட்டி அதன் பின் மரத்தை ஆணிவேருடன் வெட்டி விழுத்த வேண்டும். இதுதான் இன்று தமிழர்களுக்கு நடந்து கொண்டிருக்கிறது.'

கச்சேரிக்கு அலுவலாக வந்த ஒரு வயோதிபர், அவரைச் சுற்றி நின்ற சிலரிடம் மேற்கண்டவற்று கூறிஞர். எனக்கு விளங்காததிஞல் தொடர்ந்து அவ்விடத்தில் நின்றேன்.

'திருமலை, மட்டக்களப்பு, மன்ஞர், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி எங்கும் தமிழர்களை அகதிகளாக்கிவிட்டு கடைசியாகத்தான் யாழ்ப்பாணத்தில்' என்று அந்த வயோதிபர் தொடர்ந்தார். இப்போது எனக்கு கொஞ்சம் விளங்கியது.

'அதனை தடுக்க என்ன செய்ய வேண்டும்' — இது பக்கத்தில் நின்ற ஒருவரின் கேள்வி.


'வெட்டிய கொப்புகளையும் கிளைகளையும் எடுக்காமல், மரத்தடியில் விட்டால் மரத்தைத் தறிப்பது கஷ்டமாக இருக்கும்; தறிக்க முடியாது' என்ருர் அந்த வயோதிபர். 'அகதிகளாக ஆக்கப்பட்டவர்கள் வேறு இடங்களுக்கு போகாமல் அந்தந்த இடங்களில் அகதிமுகாமில் இருக்க வேண்டும்' என்று தொடர்ந்து கூறிஞர். அவர் கூறியதில் உண்மை இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலைக்கு அண்மையில் உள்ளது குச்சவெளி, அங்கு நடந்ததாக்குதலின் போது நிலாவெளியில் அகதியாக வந்தடைந்தார்கள் பலர். நிலாவெளியில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் பலர் தஞ்சமடைந்தனர். அங்கிருந்து முல்லைத்தீவு மாதா கோவில் முகாமிற்கு வந்தடைந்துள்ள ஒரு பெண்மணி அங்குநடந்தவற்றைக் கூறுகிறார்:

''குச்சவெளியில் நடந்த பிரச்சினையின் பின் காட்டுவழியாக 16 நாட்களாக திரிந்து, அலைந்து நிலாவெளி என்ற கிராமத்தை வந்து சேர்ந்தோம் நிலாவெளி மக்கள் நல்லமாதிரி ஆதரித்தார்கள். அங்குள்ள முகாமில் தங்கியிருந்தோம். நாங்கள் இருந்த முகாம் கிராமக்கோடு. அங்கிருக்கும்போது ஞாயிற்றுக்கிழமை காலை நாலேமுக்கால் மணிக்கு வெடிச்சத்தம் கேட்டது. உடனே பிள்ளைகளையும்கொண்டு வெளியே ஓடிவந்தோம். யூனியனுக்கு நேரே நாலுபேரை ஒரு கோஷ்டியினர் சுட்டார்கள். நாங்கள் ஓடிவந்தோம். எங்களையும் நோக்கிச்சுட்டார்கள். நாங்கள் தப்பிவிட்டோம். தோட்டத்திற்குள் புகுந்து காட்டு வழியாக போகும்போது இடையில் எங்களை சிலர் மறித்துவிட்டார்கள். நாங்கள் திரும்பி வந்து வரதராஜன் வீட்டில் இருந்தோம். அவர்கள் சுற்றிவளைத்து தடுத்து நிறுத்தினார்கள். 100 பேருக்கு மேல் நாங்கள் அகதிகளாக்கப்பட்டோம். பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கன்னியாவிலிருந்து வந்துள்ள
இ. வேலாயுதமும் மனைவி கதிராயியும்

"கன்னியாவில் ஒரு கோஷ்டியினர் வந்து வீடுகளுக்கு தீவைத்தனர். நாங்கள் காட்டுக்குள்ஓடி ஒளித்திருந்தோம். ... ஒரு கோஷ்டியினர் வந்துகண்டபடி சுட்டார்கள். அதில் சிலர் இறந்தார்கள்.... நாங்கள் நிலாவெளி-கோபாலபுரம்-முல்லைத்தீவு சென்று யாழ்ப்பாணம் முகாமிற்கு வந்து சேர்ந்தோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வேருகவும் ஆண்களை வேருகவும் வைத்துச் சோதித்தார்கள். அங்கிருந்து சில சாமான்களை எடுத்து நாங்கள் தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக கூறித் துன்புறுத்திஞர்கள். ஆண்கள் எல்லோரையும் தங்களுடன் கூட்டிக் கொண்டு போஞர்கள்.

அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாது ; எங்களைக்கொண்டுவந்து திரும்பவும் அகதி முகாமில்விட்டார்கள்

அகதி முகாமில் விடும்நேரத்தில் யூனியனுக்கு கிட்ட இருவர் கொழுத்தப்பட்டனர். இதனை என் கண்களால் பார்த்தேன் ஓடும்நேரத்தில், எங்களுடன்வந்த சுப்பிரமணியத்தின் மகனை சுட்டார்கள் ; அதற்குப்பிறகு நிலாவளி அகதி முகாமில் இருந்தோம். அங்கு இருக்கப் பயப்பட்டோம். அங்கிருந்துபுறப்பட்டு கடற்கரைக்கு வந்தோம் ; அங்கு வள்ளத்தில் வந்தவர்கள் எங்களை ஏற்றிக் கொண்டு முல்லைத்தீவுக்கு வத்தார்கள்.''

முல்லைத்தீவு மாதா கோவில் அகதிமுகாமில் ஆயிரக்கணக்கான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். பொதுமக்களாலும் பொது ஸ்தாபனங்களாலும் இவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டுவருகின்றன. முல்லைத்தீவு அரசாங்க அதிபரும்அடிக்கடி தொடர்புகொண்டு தேவையானவற்றை செய்துவருகிருர். மாதாகோவில் முகாமில் மட்டுமன்றி மற்றும் மூன்று முகாம்களிலும் அகதிகள் தொகை அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா நாகோவில் முகாமில் திருகோணமலையிலிருந்து வந்த மீனவர்கள் பலர் தங்கியுள்ளார்கள். புளியங்குளம் என்ற கிராமத்திலிருந்து வந்தமீனவர் ஒருவர் என்ன சொல்கிருர் பார்ப்போம்:

''மூன்று மீனவர்களுடன் கடலுக்கு யந்திரப் படகில் சென்றேம் 4ம் தேதி கரைக்குத்திரும்பி வந்தோம். குண்டர்கள் எங்களை அடித்துவதைத்து ஓடும்படி கூறினார்கள், வெடிவைத்தார்கள். நாங்கள் பயந்து முஸ்லிம்களின் பாடசாலையில் தஞ்சமடைந்தோம். அங்கிருந்து அடுத்த நாள் சிறு படகுமூலம் எங்கள்கிராமத்தில் வந்துஇருந்தேன். அங்கும் இருக்க முடியவில்லை, 'சோரன் காட்டில் சிறுபிள்ளைகளையும் பெரியோர்களையும் சுட்டார்கள். பயத்தில் நாங்கள் நிலாவெளிக்கு வந்து ஒரு வீட்டில் ஒருமாதமாக இருந்தோம்

''பின்னர் அங்கு ஒரு கோஷ்டியினர் வந்து பயமுறுத்தினார்கள் 'வெடிவைத்துச் சுட்டு ஓடச் சொன்னார்கள், நாங்கள் காட்டுவழி ஓடி, சாப்பாடின்றிகஷ்டப்பட்டு கடைசியில் திம்புறுப்பிட்டி வந்துசேர்ந்தோம். அங்கும் எங்களை இருக்கவிடாமல் சிலர் துன்புறுத்திக்கொண்டு இருந்தார்கள். அடுத்த நாட்காலை நிலாவெளிக்கு வந்து பார்த்தோம். சிலர் இறந்துகிடப்பதை நான் கண்டேன். எனக்கு பயம் ஏற்பட்டது. என் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, என்ன செய்வதென்று இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்போது எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் முல்லைத்தீவுக்குகூட்டிவந்தார்''

## 7. திருமலையில் எட்டுப்படை

பன்குளத்தைச் சேர்ந்த பல குடும்பங்களும் முல்லைத்தீவுக்கு வந்துள்ளார்கள். பன்குளத்தில் என்ன நடந்ததென்பதை குடும்பஸ்தர் ஒருவர் இங்கு கூறுகிறுர்:

''நான் பன்குளத்தில் 4ம்கட்டை என்ற இடத்தில் வசித்தேன். அங்கிருந்து கொள்ளைக் கோஷ்டியினர் வந்து எங்கள்வீட்டிலுள்ள பொருட்களைக் கொள்ளையடித்தார்கள். ஆடுகள், மாடுகள், கோழிகளைக் கொண்டுசென்ருர்கள். நாங்கள் பன்குளத்திலிருந்து 15மைல் காடுகளில் நடந்துநிலாவெளியை வந்தடைந்தோம். நிலாவெளி அகதிமுகாமில் தங்கியிருந்தோம். அங்கிருந்து வள்ளத்தின்மூலம் யாழ்ப்பாணம் வந்தோம்.''

திருக்கடலூரில் பாதுகாக்கப்பட்டு, முல்லைத்தீவு வந்துள்ள பெண்மணி ஒருவர் தனக்கு நடந்தவற்றை கூறுகிறுர்:

'திருக்கடலூரில் இருக்கும்போது ஒருநபரைச் சுட்டுக் கட்டியிருந்தார்கள். காடையர்கள் புகுந்து கத்தியாலும், கோடரியாலும் வெட்டுவோம் என்று பயமுறுத்திஞர்கள் நாங்கள் உயிருக்குப் பயந்து, வள்ளங்களில் நிலாவெளிக்கு வந்தோம். அங்கு ஒரு நாள் ஒரு கோஷ்டியினர் வந்து ஓடச்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிப் பயமுறுத்தினார்கள், நாங்கள் ஓடிக் கொண்டிருக்கும் போது என்னையும் 3 ஆண் குழந்தைகளையும் மறித்துவிட்டார்கள். எங்களைக் கொண்டுபோய் பயமுறுத்தி 3 ஆண்பிள்ளைகளின் நெஞ்சில் துப்பாக்கியைவைத்துக்கொண்டு 'லொக்குக் கொட்டியா! அவர்களைச் சுடுவோம்' என்றார்கள். எங்களின் பிள்ளைகளின் உயிருக்காக சுடவேண்டாம் என்று மன்றாடினோம். அவர்கள் நாங்கள் போட்டிருக்கிற காதணிகள், தாலிகள் எல்லாவற்றையும் தரும்படி சொன்னார்கள். நாங்கள் கொடுக்க மறுத்தோம். அப்போது பிள்ளைகளை அவர்கள் திரும்பவும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தினார்கள். நாங்கள் உயிருக்குப் பயந்து தாலிகளையும், சங்கிலிகளையும், தோடுகளையும் அவர்களிடம் கொடுத்தோம். எங்களுடன் இன்னுமொரு தமிழ்குடும்பமும் இருந்தது. பிறிமா ஆலையில் வேலைசெய்யும் நபருமிருந்தார். அவரிடம்25,000 ரூபா இருந்தது. அதனையும் பயமுறுத்திப்பறித்து எடுத்துக்கொண்டார்கள். பிள்ளைகளுக்கு உயிர் தப்ப நாங்கள் ஓட முயற்சித்தோம். எங்களை இருக்கச் சொன்னார்கள். எல்லா இடமும் வெடிச்சத்தம் கேட்டது பிள்ளைகள் பயந்துகத்தினார்கள். கத்தினால் பிள்ளைகளைச் சுடுவோம் என்றார்கள். நாங்கள் பிள்ளைகளின் வாயையும் மூக்கையும் பொத்தினோம். நகைகளையும் கேட்டபோது முதலில் நாங்கள் கொடுக்க மறுத்தோம். அப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிப்பாருங்கள், கடற்கரையில் உங்கள் ஆட்களைச் சுட்டுப் போட்டிருக்கிறோம் என்றார்கள். நாங்கள் கம்பி வேலியால் எட்டிப்பார்த்தோம். பக்கத்து வீட்டு பாஸ்கர் என்ற பொடியனை சுட்டுப்போட்டிருந்தார்கள். நெஞ்சிலும் வயிற்றிலும் இரத்தம் கொப்பளித்துக் கொண்டிருந்தது. 'நகைகளைத்தராவிட்டால் இப்படித்தான் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் சுடுவோம்' என்று பயறுத்தினார்கள். அதற்குப் பிறகுதான் நகைகளைக் கொடுத்தோம். 3 மணிக்கு திரும்பிப் பார்க்காமல் ஓடும்படி அவர்கள் துரத்திவிட்டார்கள், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு கம்பிவேலியால் முள்பத்தைகள், கீறக்கீற, இரத்தம் வழிந்தோட இறக்கண்டி என்ற இடத்திற்கு வந்தோம். அங்கிருக்கின்ற முஸ்லிம்கள் இங்கிருந்தால் உங்களுக்கு ஆபத்து வரலாம் என்று சொன்னார்கள். நாங்கள் பலநாட்கள் அலைந்து முல்லைத்தீவுக்கு வந்து சேர்ந்தோம். இங்கு உணவு தந்து எங்களை நல்ல முறையில் கவனித்து வருகிறார்கள்.

"திருக்கோணமலையில் இங்கிருப்பது போல் இரண்டு மூன்று படையல்ல. அங்கு எட்டுப்படையினர் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் அஞ்சித்தான் இங்கு வந்து சேர்ந்தோம்."

யாழ்ப்பாணத்திற்கு 1-10 85ல் பஸ்சில் வந்து சேர்ந்த அகதிகளில் ஒருவர் இப்படிக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதென்ன எட்டுப்படை? இராணுவப்படை கடற்படை, விமானப்படை, பொலிஸ்படை மட்டுமேதானே இருக்கிறது?" என்றேன்.

"யாழ்ப்பாணத்தில் இந்த நாலுபடைதான். ஆனல் திருமலையில் இவற்றுடன் ஊர்காவல்படை குண்டர்படை, காடையர்படை, வெளியூர்படை என்றும் இருக்கிறது"

"இன்னும் இருக்கிறதா? என்று கேட்டேன்

"ஆயுதப்படை, பாதுகாப்புப்படை, அதிரடிப் படை என்றும் கூறுகிறார்கள். ஆனல் எங்களுக்கு ஊர்காவல்படை, குண்டர்படை, காடையர் படை, வெளியூர்ப் படைகளினல்தான் துன்பங்கள் கஷ்டங்கள் அதிகம்" என்ருர்.

"ஏன்?" என்று கேட்டேன்

"அவர்களுக்கு துப்பாக்கி கொடுத்திருக்கிருர்கள். சுடத்தெரியாது. கண்டபடி சுடுவார்கள்." என்ருர்.

"எங்கிருந்து வருகிறீர்கள்"

"நிலாவெளியில் இருந்து" என்ருர்.

அவருக்கு 40 வயதிருக்கும். அவருடன் மனைவியும் 10 வயது சிறுவனும் வந்திருந்தனர். மூட்டை முடிச்சுகளுடன், உறவினரின் வீட்டைத் தேடிச் சென்று கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலையில் இருப்பவர்களில் பலருக்குயாழ்ப்பாணத்தில் உறவினர் உண்டு. ஆனால் தொடர்பு எதுவும் இல்லை. அதனால்தான் உறவினர்கள் விலாசம்கூட அவர்களுக்குத் தெரியாது. நாற்பது ஐம்பது வருடத்திற்கு முன்னால் இங்கிருந்து திருமலைக்கு திருமணம் முடித்துச் சென்றவர்களும் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் வரும் திருமலை அகதிகளில் அநேகர் இங்கு உறவினர், அல்லது நண்பர்கள் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். அப்படி உறவினர், நண்பர்களைத் தேடிக் கண்டுபிடிக்காதவர்களே முகாம்களில் தஞ்சமடைகிறார்கள்.

முல்லைத்தீவுக்கு தினமும் திருமலையிலிருந்து அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். நேற்று முன்தினம் 25 குடும்பங்கள் வந்து சேர்ந்தனர்.

முல்லைத்தீவிலிருந்து தினமும் ஒரு பஸ்சில் யாழ்ப்பாணத்திற்கு அகதிகள் அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். இந்த அகதிகள், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதிக்கு செல்கின்றார்கள்.

முல்லைத்தீவுக்கு வரும் அகதிகளில் பலரிடம் அடையாள அட்டை இல்லை. சிலர் உடுக்க மாற்று உடை எதுவும் இன்றி வந்திருக்கிறார்கள்.

ஓகஸ்ட் மாதம் 17ம் தேதி முதல் தினமும், முல்லைத்தீவுக்கு அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. மீன்பிடிக்கப் போனவர்கள் வள்ளத்தோடு சுடுபட்டுமாண்டனர்.

சிலாவத்தை அகதிமுகாமிலுள்ள திருகோணமலை 10ம் நம்பர் குறிச்சியைச் சேர்ந்த ஒரு மீனவர் தனக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கூறுகிறார்:

"11ம் தேதி காலை ஒரு பெடியன் சேச்சுக்குப் பக்கத்தில் சுட்டுக்கிடப்பதாக கூறி நாங்கள் போய்ப்பார்த்தோம். அதனுல் அப்பகுதியில் பதட்டமானநிலை ஏற்பட்டது. ஒரு கோஷ்டியினர் புகுந்து 10ம் நம்பர் திருக்கடலூர் தமிழ் மக்களைக் கொல்லப்போவதாக வதந்தி மாதிரிக் கேள்விப்பட்டோம். நாங்கள் இவ்வளவு காலம் கஷ்டப்பட்டோம். இனியாவது பிள்ளைகள் தப்பி இருக்கட்டும் என்று நினைத்து எங்கள் படகுகளை எடுத்துக் கொண்டு எங்கள் குடும்பங்கள், அயலவர்களை ஏற்றிக்கொண்டு நிலாவெளிக்கு வந்து சேர்ந்தோம். நிலாவெளிக்கு கடற்கரைக்கு சமீபத்தில் சின்னச்சின்ன இடங்களில் தங்கியிருந்தோம். நாங்கள் கடற்றெழில் செய்வதினுல் அப்படி இருந்தோம்.

"12ம்தேதி காலை அங்குவந்து சேர்ந்தோம். விபரிக்கமுடியாத இன்னல்களை அனுபவித்தோம். வெடிச்சத்தம் கேட்டதும் வெளிக்கிட்டு ஓடுவோம். இப்படியான நிலையில் நாங்கள் பிடிக்கும் மீன்களைக் கருவாடாக்கிஞேம். என்னுடைய மச்

சானும். தம்பிமாரும், திருமலையில் சிங்களவர்களின் மார்க்கட்டில் கருவாட்டை கொடுக்கப் போனார்கள். அவற்றை விற்க வேறு இடங்கள் இல்லை. அங்குதான் நாங்கள் வழக்கமாகக் கொடுப்பது, சரியான கஷ்டமாக இருந்தோம். பிள்ளைகளோ சாப்பிடமுடியாதநிலைமை. அந்த நிலையில் தான் கருவாட்டைக் கொண்டு போய் காசாக்கினால், பிள்ளைகளுக்கு பிரயோசனப்படும் என நினைத்தோம். வழமையான அந்தவியாபாரிக்குத் தான் கருவாடுகொடுப்போம். அப்போதுஇரண்டு பேரை முகிலன், பானு என்ற இருவரை பிடித்து விட்டார்கள். மற்றவர் தப்பிப்பாய்ந்து ஓடிவந்து விட்டார்கள் பிடித்தவர்களுக்கு என்ன நடந்த தென்று தெரியாது.

‘ அந்தச் சம்பவம் எங்கள் மனதில் மறைந்து கொண்டு போகும்போது மீண்டும் 10ம் நம்பரில் சிலர் கடலுக்குப்போய் மீன்பிடித்து வந்தார்கள். அந்த நேரத்தில் என் மருமகனும், மச்சானும் மகன் முறையானவர் எல்லோருமாக கடலுக்குப் போனார்கள்'' என்று அவர் கூறமுடியாமல் அழுது தவித்தார்.

அருகில்இருந்தபெண் அழுதபடி தொடர்ந்து கூறுகிறார் ‘‘ வள்ளத்தில் மீன்பிடிக்கப் போன எல்லோரையும் ஒரு கோஷ்டியினர் கட்டுப்பொசுக்கிவிட்டார்கள் மற்றப்பக்கத்தில் உள்ள வள்ளக்காரர்கள் வந்து சொன்னார்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கன்னியாவிலிருந்து வந்த சேவிகள்
ப. அன்னலட்சுமி, இ. ருக்மணி.

"ஒரு கோஷ்டியினர் வெடிவைத்தார்கள்; எல்லாருமாகக் காட்டுக்குள் ஓடினோம். ஓட ஓடசுட்டு கொண்டு வந்தார்கள். ஐந்தாறுநாள் காட்டுக்குள் ஒளித்திருந்த பின் சாம்பல்தீவு போய் நிலாவெளி முகாமுக்குச் சென்ரோம். முகாமிலும் வந்து தாக்கினார்கள். நாங்கள் காட்டுக்குள் ஓடி முல்லைத்தீவு சென்று அங்கிருந்து யாழ்ப்பாண முகாமுக்கு வந்தோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவர் தொடர்ந்து கூறுகிறார்.

"16ம் தேதி காலை வெடிச்சத்தம் கேட்டது பிள்ளைகள் நித்திரைவிட்டு எழும்பாத நேரம். பிள்ளைகளை எல்லாம் தூக்கிக் கொண்டு ஓடிவந்தோம் உடைகள் எதுவும் எடுத்து வரவில்லை. எங்கு போகிறதென்று தெரியாத நிலையில் காடு. கள் கடற்கரை வழியாக ஓடினேம் கம்பிகள் வேலிகள் எல்லாம் பாய்ந்து ஓடிவந்து ஒரு இடத்தில் நின்றேம். தம்பி மற்றம் சிலர், ஓடிவரமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் ஒரு கோஷ்டியிடம் பிடிபட்டு விட்டார்கள். அன்று முழுவதும் பிள்ளைகளுக்கு சாப்பாடு தண்ணீர் ஒன்றும் இல்லாமல் சரியான கஷ்டப்பட்டு ஒரு வாடியில் வந்து தங்கினேம். பின்னர் அங்கிருந்து இறக்ககண்டி என்ற இடத்தை வந்தடைந்தோம். அங்கு மீனவர்கள்தான் கூடுதலாக இருந்தார்கள். நாங்கள் எல்லோரும் ஓடிவந்த போது அவர்கள் பயந்து கொண்டிருந்தார்கள். அதைவிட்டு வேறு இடம் போகாத நிலைமை. அதைத்தாண்டினல் கடல்தான். அப்போது படகுகளில் வந்து கூப்பிட்டார்கள். நாங்கள் படகில் முல்லைத்தீவு வந்தடைந்தோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருமலை அகதிகளுக்கு பல வழிகளினலும் தினமும் உதவிக்குழுக்கள் இளைஞர் மகளிர் இயக்கங்கள், மாணவர், பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபனங்கள் உணவு உடை சேகரித்து, நிதிதிர ட்டி உதவி செய்துவருகின்றூர்கள்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நவாலியி லுள்ள அகதிகளுக்கு உதவிசெய்துள்ளனர். உயர் நிலை மாணவ ஒன்றியத்தினர் உணவு உடைகளை மட்டுமன்றி பணமாகவும், திருமலைக்கு லொறி மூலம் அனுப்பியுள்ளனர். தமிழ் மகளிர் அமைப்பு கச்சேரி நல்லூர் வீதியில் அகதிகள் முகாம் ஒன்றை இருதினங்களுக்குமுன் ஆரம்பித்துள்ளது. அகதிக ளாக முல்லைத்தீவில்இருந்துவரும் குடும்பங்களை இம்முகாமில் ஏற்றுக்கொள்ள தயாராகின்றனர். யாழ்ப்பாணம் கச்சேரிக்கு சமீபத்தில்தான் இந்த முகாம் இருக்கிறது. தமிழ் மகளிர் அமைப்புபிரதி நிதிகள், அப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு சென்று உணவு, உடைகள் சேகரித்து வருகிறூர்கள். அவர் களுக்கு அடையாளஅட்டை வழங்கப்பட்டுள்ளது நவாலிபிரஜைகள் குழுவினரும் அகதிகள் குடும்ப த்திற்கு தேவையான உதவிகளை செய்துவருகின் றனர்.

போக்கு வரத்து வசதி இல்லாததினுல் முல் லைத்தீவை வந்தடையும் அகதிகள், உடனடியாக யாழ்ப்பாணம் வரமுடியாதிருந்தது. தினமும் ஒரு பஸ்ஸில் அகதிகள் யாழ்ப்பாணம் வந்து கொண் டிருக்கிறூர்கள். முல்லைத்தீவுக்கு திருமலையின் பல் வேறு இடங்களிலிருந்தும் அகதிகள் வருகின்றூர் கள். படுக்கை என்ற இடத்திலிருந்தும்சில குடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கள் முல்லைத்தீவுக்கு அகதிகளாக வந்து சேர்ந்துள்ளன. அவர்களில் ஒருவர் தமக்கு ஏற்பட்ட இன்னல்களை கூறுகிறார்:

"நாங்கள் கடலிருந்து படகில் வந்திறங்கிய போது பதற்றமாக இருந்தது. முதலாளியிடம் என்ன நடந்தது என்று கேட்டோம். சந்தியில் ஒரு பொடியனை வெட்டிப் போட்டிருக்கிறார்கள். அந்த வீதியினால போகவேண்டாம், கடற்கரை வீதியினால் போகும்படி சொன்னார். நாங்கள் கடற்கரையாலே எங்கள் வீட்டிற்கு வந்து இருந்தோம். அப்போது ரவுணுக்குப் போய்விட்டுவந்த இரண்டு தமிழ் பொடியன்களை சிறிமாபுரத்தில் வெட்டி விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். எங்களுடைய ஆட்கள் சிலர் போய்பார்த்துவிட்டு வந்தார்கள். இரவு 8 மணிக்கு தமிழ் ஆட்களை வெட்டுகிறார்கள் என்று கூறினார்கள். பெரிய கரைச்சல் நடந்து கொண்டிருந்தது.

"தமிழ் ஆட்கள் எல்லாம்,படகில் நிலாவெளிக்கு வந்து சேர்ந்தோம். அங்கிருந்து தொழிலுக்குப் போய்வந்தோம். எங்கள் படகு ஒன்றில் மார்க்கட்டுக்கு மீன் கொண்டு போனார்கள். அப்போது வெளியூரைச்சேர்ந்த காடையர் கோஷ்டியொன்று அந்த படகில் போன 6 பேரையும் கட்டுப்பொசுக்கிவிட்டார்கள். சிலநாட்களுக்குப்பின் கடலுக்குப்போக சாமான்களை எடுத்துக்கொண்டு படகுக்குப் போனோம். அப்போது ஒருவர் ஓடிவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோஷ்டியினர் நிலாவெளிக்குள் வந்து தாக்குதல் நடத்துவதாகச் சொன்னார். நாங்கள் எல்லோரையும் கூட்டிக்கொண்டு காட்டுப் பாதை வழியாக நடந்து சென்றோம். மூன்று நாட்களாக சாப்பாடு தண்ணீர் இல்லாமல் தவித்தோம். விடிந்ததும் படகுகள் முல்லைத்தீவுக்கு போகும் என்று சிலர் சொன்னார்கள். நாங்கள் படகில் முல்லைத்தீவுக்கு வந்தோம்.''

1983 ஜூலை கலவரத்தின்பின் பன்குளத்தை சேர்ந்த சில குடும்பங்கள் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்திருந்தது ஞாபகம் வருகிறது. அப்போது திருமலையிலிருந்து நான்கு குடும்பங்கள் பண்ணை அகதிகள் முகாமிற்கு வந்திருந்தனர். இவர்களை நான் அப்போது சந்தித்தபோது திருமலையில் 15 வருடமாக வசித்து வந்ததாகவும் தங்கள் வீடு இரண்டு தடவை எரிக்கப்பட்டதாகவும் இனிமேல் அங்கு வாழமுடியாது என்றும் சொன்னார்கள். பன்குளத்தில் வடக்குப் பகுதியில் புதிதாகக் குடியேறியவர்கள் அடிக்கடி தொல்லை கொடுப்பதாகவும் தங்கள் வயல்களை அழித்து வருவதாகவும் சொன்னதாக ஞாபகம். அங்குபோய் இனி வாழ்வதில் பயனில்லை என்றும் சொன்னார்கள்.

83 ல் திருமலையிலிருந்து நான்கு குடும்பங்கள் வந்தன. இன்று 400 குடும்பங்களுக்கு மேல் திருமலையிலிருந்து வெளியேறிவிட்டன. இன்னும் வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 கலவரத்தின் போது திருமலையில் வாழ்ந்த பலர் சாம்பல்தீவு, நிலாவெளி போன்ற அயல் கிராமங்களில் தஞ்சமடைந்திருந்தார்கள். நிலைமை சீரானதும் தங்கள் பழைய இடத்திற்குப்போய் வாழ்ந்தார்கள். ஆனுல் இம்முறை நிலைமை மோசமாக இருந்தது. திருமலையில் பலரின் வீடுகளை உடைத்து விட்டார்கள். ஆயிரக்கணக்கான வீடுகளை எரித்துவிட்டார்கள் அகதிகளாக அயல் கிராமங்களுக்கு வந்தவர்கள் மீண்டும் பழைய இடத்திற்குப்போய் வாழ்வதற்கு விடவில்லை. நிலாவெளி முகாமில் இருந்தவர்கள் தினமும் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருப்பதாக அகதிகள் தெரிவித்தனர். அம்முகாம் தாக்கப்பட்டு அங்கிருந்து பலர் ஒரு கோஷ்டியினுல் கைது செய்யப்பட்டு, சென்றதாகவும் சிலர் திரும்பி வரவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர். இதுதான் அச்சத்திற்கு காரணமாக இருக்கலாம். நிலாவெளி முகாமிலிருந்து 85 இளைஞர்களும் 19 யுவதிகளும் கூட்டிச் செல்லப்பட்டதாக அகதி ஒருவர் தெரிவித்தார். இந்த நிலையில் முகாமில் பயமின்றி இருக்க முடியுமா? தினமும் மக்கள் கடற்கரைக்கு வந்து படகுகளைப் பார்க்கிறுர்கள். படகில் ஏறியவர்களைத்தவிர, மற்றவர்கள் காட்டுக்குள் இரவு இருந்துவிட்டு, மறுநாள் கடற்கரைக்கு வந்து படகுகள் வருகின்றதா என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறார்கள். தற்போது பன்குளத்தில் நிலைமை எப்படி என்று பார்ப்போம்.

## 9. வீடுகளும் அகதி முகாம்

பன்குளத்தைச் சேர்ந்த ஒருவர் தமக்கு ஏற்பட்ட இன்னலைக் கூறுகின்றார்:

"எங்கள் வீட்டைச் சுற்றி வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. ஒரு கோஷ்டியினர், சில தமிழ்ப் பொடியன்களையும் ஒருவயோதிபரையும் சுட்டுவிட்டார்கள். நாங்கள் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு ஒரு சில துணிகளை எடுத்துக் கொண்டு காட்டுக்குள் போய் ஒளித்திருந்தோம். 2 நாள் காட்டுக்குள் இருந்தோம். 30 பேர் வரை காட்டுவழியாக 10 மணித்தியாலம் நடந்து நிலாவெளிக்கு வந்தோம். சாப்பாடு எதுவுமே இல்லை. நிலாவெளி முகாமில் தங்கியிருந்தோம். நிலாவெளியிலும் இருக்க முடியாமல் கலவரங்கள் நடந்ததினால் நாங்கள் வள்ளத்தில் முல்லைத்தீவுக்கு வந்து சேர்த்தோம்.

"நாங்கள் இந்தியா போகும் நோக்கத்தில் தான் இருக்கின்றோம். எங்களுக்கு இந்த நாட்டில் ஒன்றுமில்லை. வீடு வாசல் வண்டில் மாடு நெல் எல்லாவற்றையும் முடிச்சுப்போட்டார்கள். ஏன் ஊருக்குப்போக வேண்டும்? ஒரு கிழமையால் பார்த்தபோது வீட்டில் ஒன்றுமே இல்லை. காடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்கள், குண்டர்கள் எல்லாம் சேர்த்து கொள்ளை யடித்துவிட்டார்கள். பன்குளத்தில் மட்டும் 20 பேரை வெடி வைத்திருக்கிறார்கள். நான் கண்ணால் கண்டேன். ஆறு பேர் தொப்பிபோட்ட ஊர்காவல் படையினர் சுட்டுக்கொண்டு போனார்கள், வயல் கரையில் மாடுமேய்த்த பொடியனை சுட்டார்கள். நான் அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சுடப்பட்டவர்கள் எல்லாம் தமிழர்கள் தான். எல்லோரும் பன்குளத்தைச் சேர்ந்தவர்கள். அன்று உடனே பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டேன். காட்டில் இருந்துபார்த்தால் இரவில் வீடுகள் எரிவது தெரியும்.''

பன்குளத்தில் மட்டுமல்ல. திருமலை முழுதும் நிலைமை மிகவும் மோசமென்பது அகதிகளை சந்தித்தபோது தெரியவந்தது. இந்த நிலைமையிலும் திரும்பவும் அங்கு சென்று வாழவும் சிலர் விரும்புகிறார்கள் அமைதி ஏற்படும் நஷ்டஈடு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இருக்கிறார்கள்.

''அகதிமுகாம்கள்; தேவாலயங்கள், கோயில்கள், பாடசாலைகளில் அமைவதுதான் வழக்கம். ஆனால் இப்போது வீடுகள் எல்லாம் அகதிமுகாம்களாக மாறிவருகின்றன. நிலைமையைப் பார்த்தால், எல்லா வீடுகளும் அகதி முகாம்களாக மாறிவிடும் போல் தோன்றுகிறது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலியிலுள்ள அகதிகளை சந்திக்கச் சென்றபோது ஒரு வயோதிபர் இப்படி என்னிடம் கூறினார்.

அவர் சொன்னது உண்மைதான். நவாலியில் ஒரு வீட்டில்தான் அகதிமுகாம். யாழ்நகரத்திலும் ஒரு வீட்டில்தான் அகதிமுகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1958-ஆம் ஆண்டுக் கலவரத்தில் கொழும்பு நகரத்தில் ஒரு கல்லூரியில் அகதிமுகாம் அமைக்கப்பட்டிருந்தது. அப்போது நானும் அங்கு ஒரு அகதியாக ஆறுநாட்கள் தங்கியிருந்தேன். அதன் பின் 77, 83ல் நடந்த கலவரங்களில் பின்வரும் தேவாலயங்கள், பாடசாலை, பாரியகட்டிடங்கள், மண்டபங்களில்தான் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டன.

கிளிநொச்சியில் தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளுக்கென முகாம்கள் அமைக்கப்பட்டன. கைதடியிலும், யாழ் நகரிலும் பண்ணை சிறுவர் விடுதியிலும், குருநகர் பழைய இராணுவ முகாமிலும் அமைக்கப்பட்டன. இன்று அகதிகள் அச்சத்தினால் மக்களுடன வாழவே விரும்புகிறார்கள். அதனால் வீடுகள் அகதி முகாம்களாக மாறுகின்றன. முல்லைத்தீவு அகதிமுகாம்களில் உள்ள மக்கள் தினமும் ஒரு பஸ் மூலம் யாழ்ப்பாணம் வருகின்றார்கள். நிலாவெளி அகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாம் பயங்கரமாகத் தாக்கப்பட்டதை தொடர்ந்து அவர்கள் முகாம்களில் இருக்க அஞ்சுகிறார்கள். அதனால்தான் இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

திருமலையில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி செய்த பெண் ஒருவர், சூட்டினால் காயமடைந்தவர்கள் பற்றி கூறுகின்றார்:

"துவரங்காடு என்ற கிராமத்தில் ஊர்காவல் படையினராலும், காடையராலும் சுடுபட்டு வந்த 21 பேருக்கு மருந்து கட்டினேன். திருக்கடலூரிலிருந்து 11ம் தேதி புறப்பட்டு 14ம் தேதி நிலாவெளிக்கு வந்தேன். நான் மருந்துகட்டியவர்களில் அந்த இடத்திலேயே இருவர் இறந்து விட்டார்கள். காயமடைந்தவர்களின் நிலைமை மோசமடைந்திருந்ததனால் அவர்களை திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தோம். அவர்களில் சிலரை கொழும்புக்கு அனுப்பினார்கள். சிலர் திரும்பவும் நிலாவெளிக்கு வந்தார்கள். அவர்களுக்கு நிலாவெளியில் வைத்து வைத்தியம் செய்தோம். காயமடைந்தவர்கள் முல்லைத்தீவுக்கு என்னோடு வரவில்லை. எங்கு இருக்கிறார்களோ தெரியாது.

"நிலாவெளியில் காலை 5 மணி போல் நாங்கள் நல்ல நித்திரை. வெடிச்சத்தங்கள் கேட்டன. நிலாவெளி சம்பவம் நடப்பதற்கு 3 நாட்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலாவெளியிலிருந்து வந்துள்ள
பெருமாள் கோவிந்தனும்
மனைவி ஜெகஜோதியும்

"நாங்கள் ஹற்றனிலிருந்து 1977 கலவரத்தில் நிலாவெளிக்கு வந்துவசித்தோம். செப்டம்பர் மாதம் ஒரு கோஷ்டியினர் வந்து நிலாவெளியைக் கடுமையாகத் தாக்கினார்கள். வீடுகளை எரிந்தார்கள். சிலர் சுடுபட்டு மாண்டார்கள். முகாமுக்குப் போகப் பயந்து படகில் முல்லைத்தீவுக்குச் சென்றோம். அங்கிருந்து யாழ்ப்பாணம் அகதிமுகாமுக்கு வந்தோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் ஒரு கோஷ்டியினர் வந்து சுட்டார்கள், பிள்ளைகள் எல்லாம் பயத்ினால் சுவர் அருகில் படுத்திருந்தார்கள். கோஷ்டியினர் போனபின்பு தான் நாங்கள் கஞ்சி காச்சிக் குடித்தோம். சூட்டுச்சத்தம் கேட்டதும் உடுத்த உடுப்புகளுடனும், வெறும் மேலுடனும் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு காட்டுப்பாதை வழியாக ஓடிவந்து கடற்கரைக்குப் போனோம். வெயில் சூடு தாங்காமல் எல்லோரும் தவித்தோம். சிறுபடகில் ஊர் காவல் படையினர் வந்து சுட்டார்கள். நாங்கள் காட்டுப்பாதையால் ஓடித்தப்பினோம். நிலாவெளியில் இருந்து 6 மைல்களுக்கு அப்பாலுள்ள இம்புறுபிட்டி என்ற கிராமத்திற்கு மழையில் நனைந்தபடி வந்தோம். பிள்ளைகள் தண்ணீர்கூட இல்லாமல் தவித்தார்கள். ஒரு வீட்டில் கொஞ்ச அரிசியும், தேங்காயும், பானையும் வாங்கி வந்து கஞ்சி காய்ச்சிக் குடித்துவிட்டு, நிலாவெளிக்கு வந்து பார்த்தோம். அங்கு வீட்டில் ஒன்றுமே இருக்கவில்லை. பின்புறப்பட்டு இறக்கக்கண்டிக்கு வந்து அங்கிருந்து முல்லைத்தீவுக்கு வந்தோம்.

''கடலில் படகில் வரும்போது சிலர் வாந்தியெடுத்தார்கள். பிள்ளைகளுக்கு குடிக்க படகில் தண்ணீர்கூட இல்லை. பிள்ளைகள் கத்துகத்து என்று கத்தி மயக்கமடைந்தார்கள். வழியில் ஒரு இடத்தில் படகை கரை சேர்த்தார்கள். அங்குள்ளவர்கள் சாப்பாடும், தண்ணீரும் தந்தார்கள். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் முல்லைத்தீவுக்கு வந்தோம். நாங்கள் இந்தியாவுக்கு போக வேண்டும் என்ற நிலையில்தான் இருக்கிறோம். அதுவும் போகிற வழியில் என்னென்ன நடக்குமோ என்று பயத்துடன் இருக்கின்றோம்.''

திருக்கோணமலையிலிருந்து வந்த ஒரு வயோதிபத்தாயார் அங்கு நடந்தவற்றைக் கூறுகிறார்:

''திருக்கடலூரில் செப்டம்பர் 11ம் தேதி காலை வீட்டில் இருக்கும் போது இரண்டு மூன்று இளம் பிள்ளைகளை வெட்டிப் போட்டார்கள் என்றார்கள். பின்பு சிறிமாபுரத்தில் வந்து எல்லாத் தமிழர்களையும் அழிக்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள். உடனே படகில் நிலாவெளிக்கு வந்து அகதி முகாமில் இருந்தோம். ஒரு கோஷ்டியினர் அதிகாலை வந்து சுட்டார்கள். பிள்ளைகளுடன் சாப்பாடுமில்லாமல் புறப்பட்டு எந்தச் சாமான்களுமில்லாமல் வந்தோம். வழியில் இளநீர் பறித்துக் குடித்தோம். இலங்கையில் இருப்பதே மிகவும் ஆபத்தாக இருக்கிறது.

''நிலாவெளிக்குச் சாமான்களைப் பார்ப்பதற்காக போகும்போது வழியில் சுடப்பட்டு கிடந்தார்கள். ஒருதாயும் பிள்ளையும் தகப்பனும் அரைகுறையாக எரிந்து கிடந்தார்கள். நாங்கள் சேலையொன்றினால் போர்த்து விட்டுச் சென்றோம். சிலர் தலை பிளந்த நிலையில் கிடந்தார்கள். எங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மருமகனை ஒரு படகில் போட்டு எரித்துக் கிடந்தது. எங்கள் கையால் ஒரு குழி தோண்டி அந்தச் சடலத்தைப் போட்டு மூடிவிட்டுவந்தார் கள்' நாங்கள் போகும்போது ஒரு கிணற்றடியில் இரண்டு சடலங்கள் கிடந்தன. எரித்துவிட்டு வந் தார்கள். மற்றொரு இடத்தில் 7 பேரைச் சுட்டு அரைகுறையாக எரித்திருந்தார்கள். வீட்டிலி ருந்த அப்பாவிப் பிள்ளைகளை, தீவிரவாதிகள் என்று சொல்லி லொறிகளில் ஏற்றிக்கொண்டு போனார்கள். அவர்களின்நிலைமை தெரியவில்லை''

திருமலையில் நடத்த துப்பாக்கிச் சூட்டின் போது மயிரிழையில் உயிர்தப்பிய இளைஞர் ஒரு வர் தமக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கூறுகிறார்:

''நாங்கள் கஷ்டம் தாங்க ஏலாமல் வள்ளத் தில்தொழிலுழகுப் போனோம். பின் மார்கட்டுக்கு மீன்கொடுக்கப் போனோம். மீன்களைக் கொடுத்து விட்டு வரும்போது எல்லோரும் ஓடினார்கள். எங் களுக்கும் பயம் ஏற்பட்டுவிட்டது கடற்கரையில் இருந்து பார்த்தோம், மார்க்கட்டில் சடலங்கள் காணப்பட்டன. பெண்கள் ஓடிவந்தார்கள். பட கில் ஏறினார்கள். அப்போது வெளியூர்காரரின் ஒரு பெரிய படகு வந்தது, சிறு படகுகளை நோ க்கி சுட்டார்கள். ஒருபடகில் 5பேர் போனார்கள். நாலு பேர் கடலுக்குள் பாய்ந்தார்கள், ஒருவர் கும்பிட்டார், கதறினார். அவருக்கும் சூடு விழுந் தது. மற்றொரு படகைக் கூப்பிட்டார்கள். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் நாங்கள் படகில் திரும்பி விட்டோம். எங்கள் படகும் சேதமடைந்தது. வள்ளம் வலை எல்லாவற்றையும் வீட்டு விட்டு வந்தோம். நாங்கள் எப்படியும் இந்தியாவுக்கு போக வேண்டும் என்று ஆயத்தப்படுத்திக்கொண்டு இருக்கிறோம். கடலில் என்ன நடக்குமோ என்று சொல்ல முடியாது. இந்தியாவிற்கு போகும் திட்டத்துடன் தான் இருக்கிறோம்.''

யாழ்ப்பாணம் அகதி முகாம் திறக்கப்பட்ட மறுதினம், அகதிகளைச் சந்தித்துக்கலந்துரையாடி பேட்டி காணச்சென்றிருந்தேன். முகாமில் ஐந்து நாறு பெண்பிள்ளைகள் நின்றார்கள். அவர்களைப் பார்த்தால், அகதிகளாகத் தெரியவில்லை. சில சமயம், திருமலை டவுனிலிருந்து வந்த அகதிகளாக இருக்கலாம் என நினைத்துக் கொண்டு உள்ளே சென்றேன். அகதி முகாம் பொறுப்பாளர் டாக்டர் சசீதரனைச் சந்தித்தேன். அப்பெண்பிள்ளைகளை விசாரித்தபோது அவர்கள் தமிழ்மகளிர் அவை தொண்டர்கள் என்று தெரியவந்தது.

அகதிகளைப் பேட்டிகாண வந்திருப்பதாகத் தெரிவித்தேன்; என்னுடன் வந்த படப்பிடிப்பாளர் 'தேவா' வும் அகதிகளை எட்டுப்பத்துப் படங்கள் எடுக்கத் தயாரானார்.

அறைவாசலைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு பெண் கைக்குழந்தையுடன் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்; ஒரே ஒரு அகதி மட்டும்தான் இருப்பதாகக் கூறினர்கள்.

தங்குவதற்கு பெரும் மண்டபம், உதவி செய்ய பல தொண்டர்கள். மூலையில் உணவுப் பண்டங்கள். ஆனல் நான் கண்டது ஒரே ஒரு அகதியைத்தான்.

'நேற்றுத்தான் ஆரம்பித்தோம். நாளைக்கு பலர் வருவார்கள்' என தொண்டர்கள் தெரிவித்தனர்.

நாங்கள் முகாமைவிட்டுப் புறப்பட்டோம். அன்றிரவு 8 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து ஒரு பஸ்ஸில் 85 அகதிகள் முகாமிற்கு வந்தனர்,

யாழ் பஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்த அவர்களை, சிலர் 'யாழ் அகதி முகா'மிற்கு அனுப்பி வைத்திருந்தனர்.

மறுநாள் அகதி முகாம் சென்றபோது, விருந்தை, ஹோல், அறைகள், அடுப்படி, எங்கும் அகதிகள், மூட்டை முடிச்சுகள், பெட்டி, பார்சல்களுடன் நிறைந்து வழிந்து காணப்பட்டனர். அகதிமுகாம் பொறுப்பாளர் ஒரு டாக்டராக இருப்பதால் அங்கு சுகாதாரத்திற்கு குறைவிருக்காது. முகாமில் மற்றொரு மலகூடம் கட்டும்வேலை நடந்து கொண்டிருந்தது. அதேசமயம், குழாய் மூலம் குடிநீர் பெறுவதற்கும் ஏற்பாடுகள் நடந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. சுற்ருடல் சுத்தம் செய்யப்படுகிறது; சுகாதாரம் பேணப்படுகிறது

'அகதிகள் ஆயிரம் பேர் வந்தாலும் அத்தனை பேரையும் ஆதரிக்க காத்திருக்கிருேம்' என்று பொறுப்பாளர் டாக்டர் சசிதரன் தெரிவித்தார். இடவசதி இல்லையே என்று கேட்டபோது, பல்வேறு இடங்களிலும், கிளைமுகாம்களை ஆரம்பித்து அங்கெல்லாம் அகதிகளை அனுப்பிவைப்போம்' என்ருர்.

## அகதிகளின் விருப்பம்

இம்முகாமிற்கு முதன் முதலில் வந்த ஒரே ஒருஅகதி ப. செல்வமதி; (வயது 28) இவர் உப்புவெளியைச் சேர்ந்தவர். இவரது கணவன் பாஸ்கரன். திருமலையில் சயிக்கிள் கடை வைத்திருக்கிருர். இவருக்கு நான்கு பிள்ளைகள். மூன்று பிள்ளைகள்மட்டும் இவருடன் இருந்தனர். மற்ருெரு பிள்ளை தந்தையுடன் திருமலையில்.

'என்ன நடந்தது' என்று கேட்டேன்.

"கடந்த மாதம் முற்பகுதியில் ஒரு கோஷ்டியினர் வந்து தாக்குதல் நடத்திஞர்கள்?"

"எங்கே?"

"எங்கள் பகுதியிலும்,சுற்ருடலிலும். நான்கு பிள்ளைகளுடன் வீட்டிலிருந்து புறப்பட்டு, சாம்பல்தீவுக்குச் சென்ருேம் '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் அங்கு சென்றீர்கள்?"

"83 கலவரத்திலும் சாம்பல்தீவுக்குப் போயிருந்தோம். பின் நிலைமை சீரானதும், மீண்டும் உப்புவெளிக்குப் போனோம். 83 கலவரத்திலும் பார்க்க இம்முறை நிலைமை மோசமாகஇருந்தது"

"என்ன செய்தார்கள்?"

"நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளை எரித்தார்கள். பலரைத் தாக்கினார்கள். தினமும் இப்படித் தான் நடந்தது."

"கணவர் ஏன் வரவில்லை" என கேட்டேன்.

"அவர் ரவுணில் இருந்தவர். அங்கிருந்து வர இயலாது"

"அவர் என்ன வேலை?"

"சயிக்கிள் கடை வைத்திருக்கிறார். நாங்கள் பிள்ளைகளுடன் சாம்பல்தீவிலிருந்து வந்தோம்"

"உப்புவெளியிலா சாம்பல்தீவிலா?"

"உப்புவெளியில் இருந்து சாம்பல்தீவுக்குப் போனோம். பின் மட்டக்களப்புக்குப் போனோம்"

"உப்புவெளியில் என்ன நடந்தது?"

"வீடெல்லாம் எரித்தார்கள்"

"எத்தனை வீடு"

"அங்கிருந்த வீடுகளெல்லாம். நூற்றுக்கும் அதிகமான வீடுகள் இருக்கும். வந்து எல்லா இடங்களும் தாக்கினார்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் கணவர் பற்றி தகவல் கிடைத்ததா?"

"அவர் அங்கே என்ன மாதிரியென்று தெரியவில்லை"

"கணவரோடு போகவில்லையா"

"இல்லை போகவில்லை"

"பிள்ளைகள் போகவில்லையா?"

"ஒரு பிள்ளைபோனது அந்தப்பிள்ளை திரும்பி வரவில்லை"

"அவர் இல்லாமல்தான் வெளிக்கிட்டீர்கள்"

"அவர் இல்லாமல்தான் வெளிக்கிட்டோம். பின் மட்டக்களப்பு போனோம்"

"மட்டக்களப்புக்கு ஏன் போனீர்கள்!"

"அங்கு தெரிந்த ஆட்கள் இருந்தார்கள். எங்கள் சொந்த இடம் யாழ்ப்பாணம். மட்டக்களப்புக்குப் போய் 3 பிள்ளைகளுடன் இங்கு வந்தேன்"

"நீங்கள் வந்து எத்தனை நாள்?"

"3 கிழமை இருக்கும்"

"அவரிடமிருந்து கடிதம் வரவில்லையா?"

"தபால் ஒன்றும் வரவில்லை. முதல் ஒருகடிதம்வந்தது. அதன்பின் வரவில்லை"

"என்ன எழுதியிருந்தார்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சாப்பாட்டுத்தான் கஷ்டமாக இருக்கிறது. பஸ் வந்தால் வருவேன் என்று எழுதியிருந்தார்''

''கடைசிப் பிள்ளைக்கு எத்தனை வயது?''

''ஒன்பது வயது''

''இனிமேல் நீங்கள் திருமலை போவது பற்றி ...?''

''இனி அங்குபோய் இருப்பது என்றால் கஷ்டம்தான். இருக்க ஏலாது''

''உப்புவெளியில் உங்கள் சொந்த வீடா, வாடகை வீடா?''

''இவை அண்ணனின் சொத்தக் காணி''

''அண்ணன் அங்கு இருக்கின்றாரா?''

''அவர் எங்கேயென்று தெரியாது. இப்படி திக்குத் திக்காய் வெளிக்கிட்டுப் போனவர்கள்''

''சம்பவத்திற்கு முன் எல்லோரும் அங்கு தான் இருந்தார்களா?

''அங்குதான் இருந்தோம்''

''பிள்ளைகளுக்கு என்ன பெயர்?''

''முதல் பிள்ளைக்கு அனுஷா ஆறு வயது. இரண்டாவதுஅவரோடு நிற்கிறார்பெயர் பாமினி, 5 வயது. மூன்றாவது வினோத். 2 வயது.''

''இந்தப் பிள்ளைக்கு?''

''இது நாலாவது பிள்ளை. எட்டு மாதம். பெயர் சரஞ்சா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் பாஸ்கரன் ஒரு பிள்ளையுடன் திருமலையில் இருக்கிறார். அவர் வருவார் என்ற நம்பிக்கையுடன் இம்முகாமில் இவர் தங்கியிருக்கிறார். ஒரு இளம் பெண் கைக்குழந்தையுடனும் மற்றும் இரு சிறுவர்களுடனும் தட்டந்தனியப் புறப்பட்டு மட்டக்களப்புக்குச் சென்று அங்கிருந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

## வீடுகள் எரிப்பு

தேடிய தேட்டத்தை எல்லாம், காடையர் கூட்டத்திடம் பறிகொடுத்த பின்னர் வாடிவதங்கி வாட்டமுற்று வந்திருக்கும் ஆயிரக்கணக்கான திருமலை அகதிகளை அன்போடு ஆதரித்து உணவளித்து உடைகொடுத்து உதவிசெய்ய தயாராக இருக்கிறார்கள் வடபகுதி மக்கள், அகதி முகாம்களில் தினமும், உணவுப்பொருட்கள், உடைகள் வந்த வண்ணமிருக்கின்றன.

யாழ் அகதிகள்முகாமில் கன்னியாவைச் சேர்ந்த பல குடும்பங்கள் வந்திருக்கின்றன. வேலாயுதம் என்பவர் கன்னியாவைச் சேர்ந்தவர். வயது 58. குடும்பத்துடன் வந்திருக்கிறார்.

'என்ன நடந்தது' என்று அவரிடம் கேட்டேன்.

''நாங்கள் குடியிருக்கும் போது ஒரு கோஷ்டியினர் வந்து வீடுகளுக்கு நெருப்பு பற்றவைத்துக் கொண்டு வந்தார்கள். நாங்கள் காட்டுப்பற்றைகளுக்குள் ஓடி ஒளித்து விட்டோம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்கள் வீட்டையும் எரித்து விட்டார் களா?''

''எல்லா வீடுகளையும் எரித்து விட்டார்கள். வாள், கத்தி ஆயுதங்களுடன் வந்து பயமுறுதினு ர்கள். நாங்கள் போனபின் வீடுகளுக்கு தீ வைத் தார்கள்.''

''கன்னியாவில் எல்லா வீடும் எரிந்து விட்ட தா?''

''நாங்கள் வந்தபோது சுமார் 45வீடுகளுக்கு மேல் எரிந்து விட்டது'

''எத்தனை பேர் சாம்பல் தீவுக்கு வந்தார்கள்?

''நாங்கள் பத்துப்பேர் வந்தோம்''

''யாரும் சுடுபட்டு இறந்தார்களா?''

'சாம்பல்தீவைச்சேர்ந்த ஒருவர் இறந்து விட்டார். அங்கிருந்த போது ஒரு கோஷ்டியினர் வந்து மீண்டும் சுட்டார்கள். நாங்கள் காட்டுக் குள் ஓடிமறைந்தோம். இரவு 9 மணிவரை வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

'' அங்கிருந்து நிலாவெளிக்கு வந்தோம். அங்கு எங்களுக்கு இருக்க இடமில்லை. அதனுல் கோபாலபுரத்துக்கு வந்து மூன்று நாட்கள் தங்கி னேம். அங்கிருந்து முல்லைத்தீவுக்கு படகில் வந்தோம்''

''எத்தனை பேர் வந்தீர்கள்?''

''படகில் 75 பேர் வந்தோம்.''

''திருமலைக்கு திரும்ப போகப் போகிறீர் களா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திருமலைக்கு திரும்பப்போய் எங்களுக்கு வாழமுடியாது, வீடுகள் சொத்துக்கள் எல்லாம் நாசமாக்கி விட்டாகள்''

வேலாயுதம் மனைவி கதிராயி. இவரும் கணவன் பிள்ளைகளுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டு காட்டுப் பாதையால், பல கஷ்டங்களுக்கு மத்தியில் வந்திருக்கிறார்.

"எத்தனை நாள் காட்டுப்பாதையால் வந்தீர்கள்?" என்று கதிராயிடம் கேட்டேன்.

''மூன்று நான்கு நாட்கள் காட்டுப்பாதையால் வந்தோம். சாப்பாடு இல்லை"

"கன்னியாவில் யாரும் செத்தார்களா?"

''ஆறும் கட்டையில் ஒருவர் சூடு பட்டு மரணமானார். மற்றும் இருவருக்கு சூடுபட்டது. இந்தப் பயத்தினாலேதான் நாங்கள் புறப்பட்டோம்."

## யாழ். அகதி முகாம்

யாழ் அகதிகள் முகாம்! அங்கு ஏற்றத்தாழ்வு கிடையாது. உயர்வு தாழ்வு இல்லை. பெரியவர் சிறியவர் என்ற பேதம் இருக்கவில்லை. எல்லோரும் சமமாகக் காணப்பட்டனர். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருந்தார்கள். விருந்தையிலும் வெளியிலும் சின்னஞ் சிறுசுகள் எண்ணெய் காணாத தலை சீவாமல் சிப்புப்படாமல் சிக்குண்டு செம்படையாக மாறிவரும் மயிர். மூன்று தவணைக்கு முழு மூச்சாக படிக்க வேண்டிய நேரத்தில் கல்வியை இழந்து பள்ளியைத் துறந்து வந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள். சொந்த மண்ணில் சுற்றித் திரிந்தவர் கள் இங்கு சுற்றுவேலிக்குள் பெற்றோர் அருகில் சுற்றியிருந்தார்கள். இவர்களை பள்ளியில் சேர்க்க ஏற்பாடாகியுள்ளது. 'தமிழ் மகளிர்அவை' நடா த்தும் இம்முகாமில் அகதிகள் தொகை நூற்றைக் கடந்துவிட்டது.

8-10-85 ல் பல குடும்பங்கள் வந்து சேர்ந் தன. மொத்தம் 25 பேர்.

முகாமுக்குப் பின்னால் மற்றொரு வீட்டிங் கிளை முகாம் திறக்கப்பட்டுள்ளது. இக்குடும்பங் கள் அங்கு தங்கியுள்ளன.

தமிழ் மகளிர் அவைத்தலைவி செல்வி கே. மேகலா சென்ற நேரமெல்லாம் முகாமில் காண ப்பட்டார். அவைச்செயலாளர் செல்வி கே.மஞ் சுளா, தொண்டர்கள் பத்துக்குமேல். அத்தனைபே ரும் அகதிகளுக்கு தேவையான உதவிகளை செய்து கொண்டிருந்தனர்.

இங்குள்ள அகதிகளில் பெண்கள்தான் அதி கம், 40 பேர் பெண்கள், 30 பேர் ஆண்கள்.

சிறுவர்கள் நாற்பது பேர். கன்னியாவைச் சேர்ந்த சிறுமி, அன்னலட்சுமி வயது 12. சிறுமிக ளுடன் இருந்த அவரிடம் சென்றேன்.

''உங்கள் ஊரில் என்ன நடந்தது?" என்று கேட்டேன். முதலில் சொல்ல தயங்கினார். அங்கு நின்ற தாய்மார்கள் சொல்லும்படி கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு கோஷ்டியினர் வந்து வெடி வைத்தார்கள். நாங்கள் பயந்து காட்டுக்கு ஓட பின்னால் வெடி வைத்துக்கொண்டு வந்தார்கள். ஐந்தாறு நாட்கள் காட்டுக்குள் இருந்தோம். கன்னியாவில் வீடெல்லாம் எரிந்தாச்சு. 6 ம் கட்டைப் பக்கம் போங்கள் என்று ஆட்கள் வந்து சொன்னார்கள், நாங்கள் கால் நடையாகச் சாம்பல்தீவுக்கு வந்தோம்.

"காட்டில் என்ன சாப்பிட்டீர்கள்?"

"ஒன்றும் சாப்பிடவில்லை. பின் சாம்பல் தீவுக்கு வந்தபோது ஆட்கள் சாப்பாடு தந்தார்கள் பின் நிலாவெளி வந்து முகாமில் இருந்தோம்.

"முகாமில் நாங்கள் படுக்கையில் இருக்கும் போது ஒரு கோஷ்டியினர் வந்து முகாம் மீது தாக்கினார்கள். நாங்கள் எழுந்து காட்டுப்பற்றைக்கு ஓடி கடற்கரைக்கு போனோம் பின்னால் சுட்டுக்கொண்டே இருந்தார்கள். நாங்கள் கடற்கரையிலிருந்து வத்தையில் முல்லைத்தீவு வந்தோம். அங்கிருந்து இங்கு வந்தோம்"

யாழ்ப்பாணத்திற்கு திருமலையிலிருந்துஅகதிகளாக வந்தசில குடும்பங்கள் தங்கள் உறவினர், நண்பர்கள் வீட்டில் தங்கியுள்ளார்கள். அவர்களில் சில குடும்பங்கள் அகதி முகாம்களுக்கு வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். பவானிதேவி (வயது35) திருமலையிலிருந்து வந்தவர்.யாழ்பாணத்தைச் சேர்த்தவர்.சில நாட்கள் உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். தற்போது நவாலி அகதிமுகாமுக்கு வந்து விட்டார்.

திருமலையில் இருக்கும் போது அவரது வீட்டில் கொள்ளை நடந்தது. 35 ஆயிரம் ரூபாவுக்கு மேல் நஷ்டமேற்பட்டது. இதுபற்றி திருமலை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. பின்பு மற்றொரு வீட்டிற்குச் சென்று வசித்துவந்தார். அங்கும் தாக்குதல் நடந்தது.பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டு, குடும்பத்துடன் யாழ்பாணம் வந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்தார், வீட்டுச் சாமான்கள், மாடு கோழிகள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன. தற்போது அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளார்,

அவர் சொல்கிறார்:

''வைகாசியிலிருந்து ஆவணி மட்டும் தொடர்ந்து பதற்றம் நீடித்தது. அதனாலே இருக்க ஏலாது, என் புருசனை நெடுக்காட்டுக்கு அனுப்பி அவர் வரும் மட்டும் எனக்கு நெஞ்சிடி. அதனால்19 நாள் கும்புறுப்பிட்டியில் அம்மா வீட்டில் இருந்தோம், பின் சாம்பல்தீவு வந்தோம் ஆடி மாதம் 14 நாள் காட்டிலே இருந்தோம். சாப்பாடு கொஞ்சம்தான் கொண்டு போனோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சாப்பாடு இல்லாததினுல் திரும்பிவந்தோம். ஆடிமாதம் வீட்டில் இருந்தோம்.

அங்கிருந்து புறப்பட்டு முல்லைத்தீவுக்கு வந்தோம். முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தோம். அராலியில் எங்களுக்கு உறவினர்கள் இருக்கிருர்கள். பஸ்ஸில் யாழ்ப்பாணம் வந்த போதுஇரவாகி விட்டது. அதனுல் நேராக இங்கு வந்தோம்''

நிலாவெளியைச் சேர்ந்தவர் பெருமாள் கோவிந்தன். வயது 85. அவர் குடும்பத்துடன். யாழ் அகதிகள் முகாமில் இருக்கிருர். அவரைச் சந்திப்போம்.

''நிலாவெளி 8ம் கட்டைக்கு அருகில், கல்லுமலைவந்து ஒருகோஷ்டியினர் தாக்குதல் நடத்திஞர்கள். கற்கள் எல்லாம் வீடுகளில் தெறித்தது. இருக்க ஏலாமல் போய் விட்டது.

"எங்கள் பகுதியில் சுமார் 60 வீடுகள் இருக்கும். நாங்கள் அகதிகளாகத்தான் நிலாவெளிக்கு வந்தோம். 77கலவரத்திற்கு ஹட்டனிலிருந்து அகதிகளாக அங்கு சென்ருேம். நிலாவெளியைக்கடுமை பாக தாக்கிஞர்கள். வீடுவாசல் எல்லாம் எரித்து விட்டார்கள். சிலரைச் சுட்டு எரித்து விட்டார்கள். எங்களுக்கு அங்கு இருக்க முடியாமல் போய்விட்டது.''

''நீங்கள் நிலாவெளி முகாமில் இருக்கவில்லையா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முகாமில் இருக்கவில்லை. வீட்டில்தான் இருந்தோம். அங்கிருக்க ஏலாமல் முல்லைத்தீவுக்குப் படகில் போய் எல்லோரும் யாழ்பாணத்திற்குப் புறப்பட்டோம்.''

''நிலாவெளியில் ஏதாவது சடலங்களைப் பார்த்தீகளா?''

''நான் பார்த்தனுன். யூனியன் வாச்சர்கள் சுடுபட்டுக் கிடந்தார்கள். மற்றும் சிலர் அரைகுறையாக எரிந்து கிடந்தார்கள்.''

''எத்தனை பேரைப் பார்த்தீர்கள்?''

''அங்குமிங்குமாகக் கனபேர் சுடுபட்டுக்கிடந்தார்கள். நாங்கள் 25,ம் திகதி புறப்பட்டு பீச் ஹோட்டலுக்கு வந்து படகில் இங்குவந்தோம்''

திருமதி ரா. ராஜபாக்கியம், நிலாவெளியை சேர்ந்தவர். வயது 46. இவர் குடும்பத்துடன் வந்து ஆனைக்கோட்டையில் ஒரு வீட்டில் தங்கியிருக்கிறார். அவர் சொல்கிறார்;

'கடந்த மாதம் 16-ம் திகதி காலை ஒரு கோஷ்டியினர் வந்து தாக்கினார்கள். வெடிச்சத்தங்கள் கேட்டன. நாங்கள் பிள்ளைகளைத் தூக்கிக்கொண்டு காட்டுக்குள் ஓடினோம். 12 மைல் காட்டுக்கூடாகச் சென்றோம். வழியில் பல சடலங்களைப் பார்த்தோம்;

''பொன்னம்மா என்ற பெண்ணும் இறந்து கிடந்தார். இரண்டு நாட்கள் காட்டில் இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோம். சாப்பாடு எதுவும் இல்லை. பின் இறக்கக் கண்டிக்கு வந்தோம். அங்கிருந்து படகில் சிலாவத்தைக்கு வந்து பாடசாலை முகாமில் தங்கினோம். பின் பஸ்ஸில் இங்கு வந்தோம்.

"திருக்கடலூரில் மகளுக்குக் கொடுத்த வீடும், நிலாவெளியில் உள்ள எங்கள் வீடும் தாக்கப்பட்டுவிட்டது. வான் ஒன்றும் எரிந்து விட்டது. படகு, கரவலை எல்லாம் எரிந்து விட்டன. இப்பபோய் தொழில் செய்ய முடியாது. நிலைமை சீராகும் வரை இங்கு இருப்போம். எங்களுக்கு 11 பிள்ளைகள். என் மகனையும் மருமகனையும் சிலர் கடத்திச் சென்றுவிட்டார்கள். மற்றவர்களும் அங்குமிங்குமாகப் போய்விட்டார்கள்"

க. வள்ளிநாயகி திருக்கடலூரைச் சேர்ந்தவர். இவருக்கு 9 பிள்ளைகள். வயது 54. இவரும் அகதியாக வந்து 5 பிள்ளைகளுடன் ஆனைக்கோட்டையில் தெரிந்தவர் வீட்டில் தங்கியிருக்கிறார். அவர் சொல்கிறார்;

"திருக்கடலூர் தாக்கப்பட்டதும் உடுத்த துணிகளுடன் நிலாவெளிக்குவந்தோம். குடும்பத்தில் 7 பேர் வந்தோம். காட்டுப் பாதையாக நான்கு நாட்கள் அலைந்தோம். தேங்காய்ச் சொட்டும், உப்புத் தண்ணீரும்தான் சாப்பாடு. வரும்போது வழியில் சிலர் சுடுபட்டுக் கிடந்தனர். சில சடலங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டுக்கும் பலியான தாயிடம் பச்சைக் குழந்தை ஒன்று பால் குடித்தபடி கிடந்த பரிதாபக் காட்சியையும் கண்டோம். சிலர் வள்ளத்தில் எரிக்கப் பட்டுக் கிடந்தனர். அப்பாவி மக்கள் கண்டபடி சுடப்பட்டுகிடந்தனர். நாங்கள் படகில் சிலாவத்தைக்கு வந்து அங்கிருந்து இங்கு வந்தோம்.''

யாழ் அகதிகள் முகாமில் திருமதி பாத்திமா மேரி என்ற பெண்ணைச் சந்தித்தேன். இவர் நிலாவெளியைச் சேர்ந்தவர். வயது 28. குடும்பத்தினருடனும் உறவினருடனும் வந்திருந்தார். நிலாவெளியிலிருந்து இம்மாதம் 4ம் தேதி புறப்பட்டு படகில் முல்லைத்தீவு வந்திருந்தார். முல்லைத்தீவு தேவாலயத்தில் அகதிகள் தொகை அதிகரித்ததைத் தொடர்ந்து சினிமாத் தியேட்டர் ஒன்றில் அகதிமுகாம் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அங்கு தாங்கள் தங்கியிருந்ததாகவும் கூறுனர்.

''கையில் காசு இல்லை. காசு உள்ளர்கள் எல்லாரும் முதலிலே புறப்பட்டு விட்டார்கள். படகுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். காசுஇல்லை. பிறகு ஒரு படகில் இலவசமாக ஏற்றி வந்து முல்லைத்தீவில் விட்டார்கள்.

''அங்கு தற்போது இருப்பவர்கள் எல்லோரும்ஏழைகள், செலவுக்குக்கூட காசு இல்லாதவர்கள். என் அப்பா அம்மா அங்கு சாப்பிட வழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமல் பட்டினி கிடக்கிறார்கள். பெரும் பணக் காரர்கள் எல்லாரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். அவர்கள் தோட்டத்தில் வேலை செய்தவர்களுக்கு தொழில் எதுவுமில்லை, வயலிலும் வேலை இல்லை. கடலுக்கும் போகமுடியாது. சரியான கஷ்டம், தமிழ்க் கடைகள் ஒன்றும் இல்லை. சமான்கள் வாங்கமுடியாது. சிலநாட்கள் சாப்பாடும் கிடையாது.

''இன்னும் சிலவாரம் சென்றால் அங்கு பெரும் பஞ்சம் ஏற்படும். உணவு வகைகள் எதுவுமே இல்லை. எத்தனையோ ஏழை வீடுகளில் பட்டினி. குழந்தைகள் பசி, பசி என்று சில வீடுகளில் துடிதுடிக்கிறார்கள். அந்த நேரம் சில கோஷ்டியினர் வந்து அடிக்கடி பயமுறுத்துகிறார்கள்.


''முல்லைத்தீவு முகாமில் சரியான இட நெருக்கடி தினமும் படகில் அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் யாழ்ப்பாணம் வரமுடிவு செய்தோம். இங்கு எங்களை நன்றாகப் பார்க்கிறார்கள். இப்படித் தெரிந்திருந்தால் போனமாதமே இங்கு வந்திருப்போம்''

திருமலை அகதிகளின் துயர வாக்கு மூலங்களுக்கு முடிவேயில்லை!

திருமலைக் கொடுமைகள் மிக மிகப் பயங்கரமானவை-பரிதாபமானவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்டம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1 புல் மோட்டை
2 திரியாய்
3 குச்சவெளி
4 கும்பிறுப் பிட்டி
5 இறக்க கண்டி
9 நிலா வெளி
7 பன் குளம்
8 சாம்பல் தீவு
9 கன்னியா
10 உப்பு வெளி
11 திருக்கோணமலை
12 தம்பலகாமம்
13 மூதூர்
14 கந்தளாய்
15 சேருவலை
19 ஈச்சிலம்பத்தை
★ முல்லைத்தீவு மாவட்டம்
● மட்டக்களப்பு மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையின் தமிழ்ப் பழமை

## — க. சி. குலரத்தினம் —

உலகில் சரித்திரம் எனவும் வழங்கும் வரலாற்றுக் காலம் ஒருசில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பின்னுக ஆரம்பித்தது எனலாம். ஆனல் அதற்கு முந்தியகாலம் எப்போது ஆரம்பமானது எப்போது முடிவுற்றது என்னும் காலவரையறையை எவரும் அறியார். அது இதிகாசகாலம் என்னும் பெயரில் நிலவியது என்பதை எல்லோரும் அறிவர்.

நிலத்தின் மேற்படையில் உள்ள மண் வரலாற்றுக் காலம் எனக் கொண்டால், கீழ்ப்படை மண் இதிகாசகாலம் எனக் கொள்ளலாம். அதனுலேயே பழைய கால சம்பவங்களை ஆராய்ந்தறிவதற்குப் புதைபொருளாராய்ச்சிக்காரர் நிலத்தைத் தோண்டுகிருர்கள். அவர்கள் தோண்டத் தோண்ட மிகப் பழைய நாகரீகங்கள் தோன்றக் காண்கின்ருேம்.

இதிகாசம் எனப் பெயர் பெற்ற நூல்கள் இரண்டு. அவை இராமாயணம், பாரதம் என்பனவாம். இவற்றுள் இராமாயணம் காலத்தால்முந்தியது இராமாயணம் என்பது இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளின் பழைய கதை. இதிகாசம் இவ்வாறு நடந்தது என்று கூறுவதால் அதுவும் பழைய கதையையே குறிப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மிகப்பழைய நாடு. இதைச் 'சிவ பூமி' எனவே முனிவர்கள், ஞானிகள், நாயன்மார் கள் குறிப்பிட்டுள்ளார்கள். இலங்கை இராவ ணன் சிவபக்தன், திருநீறு பூசுபவன், பெருவீரன் என்பது கதை. இராவணன் காலத்துப் புகழ்பெ ற்ற இலங்கைப் பிரதேசங்களுள் திருக்கோணமலை யும் ஒன்று. மற்றது திருக்கேதீஸ்வரம். அது மாந் தை, மாதோட்டம் என்னும் பெயர்களாலும் வழங்கியது. இவ்விரு பிரதேசங்களும் மிகப் பழைய காலந் தொட்டுத் தமிழ் மக்கள் குடியிரு ப்புக்களால் பொலிவு பெற்றுச் சிவமணம் கமழ நிலவிவந்தன.

திருக்கோணமலை தென்கிழக்காசிய நாடுகளி லேயே புகழ்பெற்றது. பாரதநாட்டின் வடகைலை யின் வேருய், தென்னுட்டில் கைலை எனச் சிவசம் பந்தம் பெற்றது. சிவத்தையும் சைவத்தையும் இணைபிரிக்க முடியாதவாறு சைவத்தையும் தமி ழையும் பிரிக்க முடியாது. அதைச் சைவத்தமிழ் எனக் கூறினும் அமையும்.

திருக்கோணமலை என்னும் திவ்வியம் பழுத்த திருநகரத்தை வேதசிரசுகளான உபநிடதங்கள், வேதவாக்கியப்பொருளை வலியுறுத்தும் புராண தலபுராணங்கள், திருமுறைகள் யாவும் போற்று கின்றன. திருகோணமலையின் தெய்விகத்தை முனிவர்கள் சித்தர்கள் நெஞ்சாரப் புகழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கோகண்ணம், திருக்குன்றுமலை, தட்சண கைலாயம், தென்கைலை, திருமலை என்றெல்லாம் போற்றுவர்.

வரலாற்றுக் காலத்தில் முன்னோடியாக விள ங்கிய முதுதொண்டர்களுள் குளக்கோட்டன் என்னும் மன்னன் பெயர் வழங்குகின்றது. ''முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்ப ணியை'' எனத்தொடங்கும் பழைய கல்வெட் டுப் பாடல் நாடறிந்ததே.

இலங்கையின் மிகப்பெரிய நதியாய மகாவலி கங்கை என்னும் சிவநதி கிழக்கே சங்கமிக்கும் பெருவளம் பெற்றது திருக்கோணமலை. அங்கே தமிழ்க்குடிகள் நெருக்கமாக வாழ்ந்து பாவநாசச் சுனையில் தீர்த்தமாடி, மாதுமையாள் சமேத கோணநாதப் பெருமானை முறைப்படி வணங்கி னர்.

திருக்கோணநாதர் திருக்கோயிலமைந்தவா றும், அதனைச் சூழவுள்ள ஊர்கள் யாவும் கோயி லுக்குப் பலவிதமான வருவாய்களை வழங்கிய வர லாறும் அற்புதமானவை. அங்கேயுள்ள ஊர்க ளிற் பழையது மூதூர். திருக்கோயில் விளக்கு களுக்குத் தாமரை நூலால் திரிசெய்து கொடுத் தவூர் திரியாய். இவ்வாறே மாவட்டத்தின் ஊர் கள் யாவும் சிவ மணங்கமழச் செந்தமிழ் விரிக் கும் செம்மை வாய்ந்தனவாயுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பரும் நலமும் சீரும் சிறப்பும் பெற்ற திருக்கோணமலையைச் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் முறையாக அறிந்தனர். சிவாலயங்களாலும் சிவலிங்கங்களாலும் பொலிந்த பிரதேசத்தை மறுசமயத்தவனுகிய மகாசேன மன்னனும் நன்கறிந்திருந்தான்.

மத்தியகாலத்துக்கு முற்பட்ட சோழப் பெருமன்னர்களும் பாண்டிய மாமன்னர்களும் திருக்கோணமலையை நன்கறிந்திருந்தனர். அவர்கள் திருக்கோணமலைச் சிவன் கழலேத்திய சீருடைச் செம்மல்கள். அவர்கள் திருக்கோணமலையைகண்டு பணிந்து விட்டுச் சென்றனவற்றையெல்லாம் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராசராசசோழன், இராசேந்திரசோழன் காலத்துக் கல்வெட்டுக்களுள் பல கவிழ்த்தப்பட்டுள்ளன பல புதைக்கப்பட்டுள்ளன. சில படிக்கக்கூடியதாகக் கோயிற் சுவர்கள், மதில்கள், தூண்களில் உள்ளன. பாண்டியர் பொறித்துச்சென்ற அவர்களின் சின்னமாய் மீன்கள் திருக்கோணமலைக் கோட்டை வாசலில் உள்ளன. இணைக்கயல் எழுதிய விபரம் ஒரு தூணில் சித்திரமாகவுள்ளது. இதன் வரலாறு வேருெரு கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

வடபாரதத்தில் கங்கை நதி கடலோடு கலக்கும் பகுதியில் கற்கத்தா நகரம் அமைந்தவாறு இலங்கையில் மகாவலிகங்கை கடலோடு கலக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் திருக்கோணமலைநகர் அமைந்தவாறும், அங்கே பெருநகரில் காளிதோட்டம் அமைந்தாற் போல இங்கேயும் பழைய பத்திரகாளி கோயில மைந்தவாறும் சாலப்பொருத்தமாகவே உள்ளன.

இன்னும் இடைக்காலச் சோழப் பெருமன்னர்களுள் முன்னோடியான விஜயபாலயன் தஞ்சாவூரில் எடுத்த நிசும்பசூலி என்னும் காளி கோயில் போலத் திருமலைக் காளிகோயிலமைந்துள்ளது எனக்கருதினும் அமையும். திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே சென்றேறியதால் உருப்பெற்றதமிழ்நாடு, தனக்கணித்தாக, தன்னடிக்கீழ்உள்ள ஈழவளநாட்டைத் தமிழ் வளமாக்கிய செம்மையை ஆராயவும் வேண்டுமோ? அதில் ஐயமும் உண்டோ? குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுத்து வெயர்வையரும்பினால் நாம் என் செய்வோம்?

இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களுள் பண்பாடுடையவர்களும் இருந்தார்கள். அவர்களை நெறிப்படுத்திய மந்திரிமார்களும் சேனாதிபதிகளும் நம்பிக்கைக்குரிய தமிழராயே இருந்தனர். முதலாம் பராக்கிரமபாகு தனது நம்பிக்கைக் குரிய படைத்தலைவனை பர்மா நாட்டின் மீது படையெடுக்க அனுப்பியமை ஒருதாரணம். பௌத்தமதத்தவனாய மன்னன் சைவப்பெருங் கோயிலான இராமேஸ்வரத்தில் முதற்றரமான திருப்பணி வேலைகள் செய்வதற்குத் தூண்டுகோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாய்இருந்தவனும் ஒரு தமிழன். அவன் திருப்பணிவேலைகளுக்கு வேண்டிய கருங்கற்களைச் செப்பனிட்டுக் கப்பலேற்றிய நிலைக்களமும் திருக்கோணமலையேயாம்.

திருக்கோணமலை மாவட்டத்திலும் அயல் மாவட்டங்களிலும் தமிழர் நெருக்கமாக நெருங்கி நிரந்தரமாக வாழ்ந்தமைக்குத் தகுந்த சான்றுகள் நிரம்பவுண்டு. முன்னர் சோழப் பெருவேந்தனுயஇரண்டாம் பாராந்தகனின் தளபதியொருவன் இப்பிரதேசத்தில் மாண்டானுக, அவனுடையமைந்தன் தன் தந்தையாரின் நினைவாக ஈழத்தில் செய்த அறப்பணியும் தமிழ்ப்பணியேயாம்;

புலத்தியர் நகரம் பொலநறுவையானதும், புலத்தியர் சிலை பராக்கிரமபாகுவின் சிலையானதும் ஆராய்வுக்குரியனவாகும். இவ்வாறே திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள மிகப் பழைய ஊர்களின் செந்தமிழ்ப் பெயர்கள் சிங்களமயமாக உச்சரிக்கப்படுவதும் விசனத்துக்குரியது.

இன்று சோழப் பேரரசன் இராசராசனின் முடிசூட்டு வைபவத்தின் ஆயிரமாண்டுவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பெறும் வேளையில், அப்பெருவீரனை ஈழமண்டலமும் நினைவு கூர்வதற்கு எங்கள் நாட்டில் நினையான சாதனங்கள் உள்ளன என்பதைக் காணும்போது உள்ளம் பூரிக்கின்றது. அவனுடைய பொற்கால வரலாற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் மெய்க்கீர்த்தி வரிசையில் திருகோணமலைக் காளிகோயிலில் கல்வெட்டுக்கள் உள்ளன. ஒரு கல் தூணில் நான்கு பகுதிகளிலும் அவன் புகழ் துலாம்பரமாகவுள்ளது.

இவ்வாறே இராசேந்திரசோழனின் கல்வெட்டுக்களும் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாகக் கிடைத்துள்ளன. திருக்கோணமலையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களில் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சுத்த செந்தமிழ்ச் சைவத் திருமுறைப் பதிகமும், திருக்கோணமலையையும் தமிழரையும் அவர்கள் நெருக்கமாக வாழ்ந்து விளைவுபெருக்கிய விதத்தையும் கூறுகிறது.

திருக்கோணமலைக்கு இப்பால் சோழமன்னன் பெயரால் நிறுவிய மன்னன்பிட்டி தமிழரின் மேட்டுநிலக்குடியேற்ற நிலம் என்பதில் மிகையேதுமில்லை. அன்றி அங்கே அடர்ந்து மிகுதியாக காணப்படும் திருக்கொன்றை, வில்வம் சைவப் பண்பாட்டின் தாவரசங்கமம்தானே. திருக்கோணமலை மாவட்டம், பொலனறுவை மாவட்டம் முதலான பிரதேசங்கள் சோழநாட்டவரின் கவனத்தை ஈர்த்த பிரதேசங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூறு ஆண்டுகளாக

பரம்பரை பரம்பரையாக

திருக்கோணமலையில்

வாழ்ந்து வந்த தமிழ்மக்கள்

தமது தாயகத்திலேயே

அந்நியரால் கொடுமைப்படுத்தப்பட்டு

அகதிகளாகி

யாழ்ப்பாணம் ஓடி வந்த

பரிதாபக் கதைகளை

நீங்கள்

படித்தாவது அறியவேண்டாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org